விலை: 50.00
பக்கங்கள் - 16

Website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 27
ஒலி 042 வள்ளுவர் ஆண்டு 2057 தை 16 வெள்ளிக்கிழமை (30.01.2026) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

வடமாகாணத்தின் மிகப்பெரிய கல்விக் கண்காட்சி இன்று
EduExpo
2026 ஜனவரி மாதம்
30 31
9 AM TO 5 PM
(6699)

## கிவுல் ஓயா திட்டம்; வவுனியா, முல்லைத்தீவு மாவட்ட இனப் பரம்பலை மாற்றியமைக்கும் முயற்சி

### எதிர்ப்புப் போராட்டத்தில் ஒன்றிணையுமாறு அழைப்பு

(வவுனியா)

கிவுல் ஓயா திட்டம் மூலம் வவுனியா - முல்லைத்தீவு மாவட்ட இனப்பரம்பலை மாற்றியமைக்க முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. எனவே எதிர்வரும் 02ஆம் திகதி திங்கட்கிழமை கிவுல் ஓயா நீர்த்தேக்கத் திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து முன்னெடுக்கும் போராட்டத்தில் அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என வன்னி பாராளுமன்ற உறுப்பினர் ப.சத்தியலிங்கம் கோரிக்கை விடுத்துள்ளார்.

தமிழரசுக் கட்சியின் தாயகம் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வன்னிப் பிரதேசத்தில் கிவுல் 15ஆம் பக்கம் பார்க்க

## சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர்

### அடுத்த மாதம் இலங்கைக்கு விஜயம்



(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜீவா அடுத்த மாதம் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

15ஆம் பக்கம் பார்க்க

## யுத்தத்தால் வெளியேறியவர்கள் இடையூறின்றி திரும்பலாம்

### அமைச்சர் ஆனந்த விஜேபால



(கொழும்பு)

நாட்டில் நிலவிய உள்நாட்டு யுத்தத்தின் காரணமாக முறையற்ற வகையில் வெளிநாடுகளுக்குச் சென்றவர்கள் மீண்டும் 15ஆம் பக்கம் பார்க்க

### புதிய அரசியலமைப்பில்

## அனைத்துத் தரப்பையும் உள்ளடக்குவது அவசியம்

### ஜனாதிபதி அநுரவிடம் கோரிக்கை

(கொழும்பு)

இலங்கைக்கான புதிய அரசியலமைப்பொன்றை வடிவமைக்கும் செயற்பாட்டின்போது அனைவரையும் உள்ளடக்கிய வெளிப்படையான மற்றும் பங்கேற்பு செயன்முறையை உறுதி செய்ய வேண்டும் என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

(15ஆம் பக்கம் பார்க்க)

## யாழில் சிங்கள மக்களுக்கு வீட்டுத்திட்டம்

### தென்மராட்சி பிரதேச ஒருங்கிணைப்பு கூட்டத்தில் கடும் வாக்குவாதம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் சிங்கள மக்களுக்கு வீட்டுத் திட்டம் வழங்கப்படுன்றமை தொடர்பில் தென்மராட்சி பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கடும் வாக்குவாதம் இடம்பெற்றிருந்தது.

தென்மராட்சி பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் பாராளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன் தலைமையில் நடைபெற்றது.

மேற்படிக் கூட்டத்தில் யாழ்ப்பாணத்தில் முன்னெடுக்கப்படும் சிங்கள வீட்டுத் 02ஆம் பக்கம் பார்க்க

## குப்பைக்கு மூட்டிய தீ வீட்டு அறையில் பரவியதில்

### பெண் ஒருவர் மரணம்

(யாழ்ப்பாணம்)

குப்பைக்கு மூட்டிய தீயானது அருகிலுள்ள வீட்டு அறைக்குள் பரவியதனால் பெண் ஒருவர் மரணமடைந்துள்ளார்.

யாழ்ப்பாணம் அரியாலை ஏ.வி. வீதியில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் அதே பகுதியைச் சேர்ந்த பரமசிவம் பரமேஸ்வரி 15ஆம் பக்கம் பார்க்க

### பளை நகர்ப் பகுதியில்

## டிப்பர் மோதியதில் பெண் ஸ்தலத்தில் பலி

(பளை)

பளை நகர்ப் பகுதியில் டிப்பர் வாகனம் மோதியதில் மோட்டார் சைக்கிளில் சென்ற பெண் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

நேற்று வியாழக்கிழமை (29) முற்பகல் 11. 45 மணியளவில் பளை நகரின் பச்சிலைப்பள்ளி பிரதேச 15ஆம் பக்கம் பார்க்க




### தரம் ஒன்றுக்கான

## புதிய கல்விச் சீர்திருத்தம் நேற்று முதல் அமுலானது



(கொழும்பு)

2026ஆம் ஆண்டு தரம் ஒன்றுக்கான புதிய கல்வி மறுசீரமைப்பை நடைமுறைப்படுத்தல்

15ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழில்...

திட்ட விவகாரம் தொடர்பில் கடும் வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்றன.

மேற்படி வீடமைப்புத் திட்டங்கள் குறித்து ஆளும் தரப்பு பாராளுமன்ற உறுப்பினர் க. இளங்குமரன் வழங்கிய விளக்கங்கள் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தால் சில குற்றச்சாட்டுக்களும் முன்வைக்கப்பட்டிருந்தன.

குறித்த கூட்டத்தில் கலந்து கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா சிங்கள வீட்டுத் திட்டங்கள் தற்போது யாழில் வழங்கப்படுவதாகவும், அதனை நினைத்தபடி விற்பனை செய்வதாகவும் தமிழ் மக்கள் பலர் வீடுகள் இன்றி இன்றும் அலைக்கழிக்கப்படுவதாகவும் குற்றம் சுமத்தியிருந்தார்.

இதற்குப் பதில் வழங்கிய இளங்குமரன், காணி உறுதிப்பத்திரம் வழங்கிய பின்னர் அதனை விற்பனை செய்வதற்கான உரிமை அவர்களுக்கு இருக்கின்றது எனவும் இது தொடர்பில் சட்ட நடவடிக்கைக்குள் செல்வது சாத்தியம் அற்றது எனச் சுட்டிக்காட்டினார்.

இதன்போது குறுக்கிட்ட கஜேந்திரகுமார், "உங்கள் அரசாங்கத்தில் தமிழ் மக்களின் காணியை அபகரிக்க ஒரு வர்த்தமானியை வெளியிட்டீர்கள். அதில் 3 மாதங்களுக்குள் காணிகள் தொடர்பில் உறுதிப்படுத்தாவிடில் காணிகள் அரசுடமையாக்கப்படும் எனக் கூறியிருந்தீர்கள்.

இதில் குறிப்பாக வெளிநாட்டில் புலம்பெயர்ந்து இருக்கும் காணி உரிமையாளர்களில் 90 சதவீதமானோர் இலங்கை அரசின் அச்சுறுத்தலால் நாடு கடந்து சென்றவர்கள்.

அவ்வாறு இருக்கையில் போலியாக பல விடயங்களை கூறி சிங்கள குடியிருப்புகள் வருவதற்கு இந்த அரசாங்கம் தமிழ் மக்களின் காணியை அபகரிக்கின்றது. குறிப்பாக இங்கு காலம் காலமாக உள்ளவர்களுக்கு வீடுகளைப் பெற்றுக்கொடுக்காது இருப்பது எவ்விதத்தில் நியாயம் மிக்கது?

மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் வழங்கப்பட்ட காணிகள் வீட்டுத்திட்டங்களில் குடியிருப்பாளர்கள் இல்லாவிட்டால் அதனைப் பெற்று தமிழ் மக்களுக்கு வழங்குங்கள் என்றார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த அர்ச்சுனா, சாவகச்சேரி பிரதேச செயலக பிரிவில் 500க்கும் அதிகமான மக்கள் வீடுகள் இன்றி இருக்கின்ற நிலையில் தற்போது 250 வீடுகள் சிங்கள மக்களுக்கு வழங்கப்படுகின்றமை ஏன் என்பதே எனது கேள்வி என தெரிவித்திருந்தார். (ம-7,30)


# கண்ணீர் அஞ்சலி



கோப்பாய் தெற்கு கந்தவேள் பாடசாலையின் முன்னைநாள் ஆசிரியரும், துணுக்காய் கல்வி வலயத்தின் ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளருமாகிய

**திரு.செபஸ்ரியாம்பிள்ளை அன்ரனி ஜோர்ச்**

அவர்கள் காலமானதையிட்டு நாம் ஆழ்ந்த துயரடைகின்றோம். துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(6697)

முன்னைநாள் அதிபரும், முன்னைநாள் சக ஆசிரியர்களும்
கோப்பாய் தெற்கு கந்தவேள் த.க பாடசாலை

"ஓம் ஸ்ரீ விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ"

# சுழிபுரம் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம்

## புனராவர்த்தன பிரதிட்டா மகா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

## 01.02.2026



"அட்ட சித்திகள் நன் அன்பர்க் கருள
பிர திட்டா கும்பா பிஷேகங் காணுமோர் சித்தமுடன்
அண்ட கோடி புகழ் சுழிபுரப்பதி யமர்ந்த
பத்திரகாளி யெனு மெங்க ளன்னையே"



**கிரியாரம்பம்**
தை மாதம் 14ம் நாள் புதன்கிழமை
28.01.2026

**யாகாரம்பம்**
தை மாதம் 16ம் நாள் வெள்ளிக்கிழமை
30.01.2026

**எண்ணெய்க் காப்பு**
தை மாதம் 17ம் நாள் சனிக்கிழமை
31.01.2026
நேரம் : காலை 7.00 – மாலை 3.30

**மகா கும்பாபிஷேகம்**
தை மாதம் 18ம் நாள் ஞாயிற்றுக்கிழமை
01.02.2026

**தைப்பூச நன்நாள்**

அம்பாளின் கும்பாபிஷேகக் கிரியைகளுக்கு அடியவர்கள் தங்களால் இயன்ற உதவிகளை வழங்கி இஷ்ட சித்திகளைப் பெற்றுய்யும் வண்ணம் அழைக்கின்றோம்.

(6070)

ஆலய பரிபாலன சபையினர், சுழிபுரம் பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம்

# காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் இலந்தைக்குளம் வீதியில் புளியம் வீதி முகப்புடன் 1 ½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**

- யாழ்ப்பாண பஸ் நிலையம் 3 ½ Km தூரம்.
- A9 வீதியிலிருந்து 350m தூரம்.
- வீடு, கடை அமைப்பதற்கு உகந்த இடம்.

தொடர்புகளுக்கு :

**076 860 2770**
**076 987 8617**

(1996)

# கண்ணீர் அஞ்சலி

எமது சங்கத்தின் செயலாளர் சைவப்புலவர் செ.த.குமரன் அவர்களின் அன்புத் தாயார்

அமரர் Dr.திருமதி
**தவராசா தங்கரட்ணம்**

(சித்த வைத்திய கலாநிதி RIMP - 13963,
பளை, வீமன்காமம், மாவிட்டபுரம்)



அவர்கள் இயற்கையெய்தியதை அறிந்து மிகுந்த கவலையுடன் கண்ணீர் அஞ்சலிகளை சமர்ப்பிக்கின்றோம்.

மீளாத்துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா தில்லைக் கூத்தனின் திருவடிகளில் சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!! (1999)

பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கம்

தோற்றம் 30.10.1949
மறைவு 28.01.2026


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீட்டின் பொருளாதார நிலை

## பிள்ளையின் கல்வியைத் தீர்மானிக்கக்கூடாது

### பிரதமர் ஹரிணி அமரசூரிய சுட்டிக்காட்டு



**(கொழும்பு)**

**பிள்ளைகளின் கல்வி அவர்களது பெற்றோரின் பொருளாதார நிலையைப் பொறுத்து தீர்மானிக்கப்படக் கூடாது என்பதுடன் எந்தவொரு பிள்ளையும் கல்வியிலிருந்து புறக்கணிக்கப்படக் கூடாது என்பதுமே அரசாங்கத்தின் தீர்மானம் என பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.**

புதிய கல்விச் சீர்திருத்தங்களின் கீழ் முதலாம் தரத்திற்கு நுழையும் அனைத்துப் பிள்ளைகளுக்கும், கல்வி அமைச்சர் என்ற ரீதியில் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஒவ்வொரு பிள்ளையினதும் சமழான கல்வி உரிமையை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ளது. இந்த நேர்மையான முயற்சியை வெற்றிகரமாக முன்னெடுக்க அனைவரதும் ஆக்கபூர்வமான கருத்துக்களை எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

அன்புக்குரிய மாணவர்களே! நீங்கள் சுமந்து வரும் புத்தகப் பையின் சுமையைக் குறைக்க நாம் முயற்சிப்பது, நீங்கள் பெற்றுக்கொள்ள வேண்டிய அறிவு, மனப்பாங்கு மற்றும் திறன்களில் எவ்விதக் குறைபாடும் ஏற்படாத வகையில், எதிர்கால உலகிற்குப் பொருத்தமானவர்களாக உங்களை ஒரு முழுமையான பிரஜையாக உருவாக்குவதற்காகவே.

அன்புக்கினிய பெற்றோர்களே! நெகிழ்வுத்தன்மை மிக்க சிநேகபூர்வமான அணுகுமுறையுடன் அந்த நேர்மறையான வழிகாட்டல்களையும் கருத்துகளையும் ஏற்றுக்கொண்டு, ஓடி ஆடி விளையாடியவாறு வளரும் உங்கள் பிள்ளைகளின் அனுபவங்களைச் செயற்றிறன் மிக்க, அர்த்தமுள்ளவையாக மாற்றி, அவர்களை வகுப்பறையில் மகிழ்ச்சியுடன் வைத்திருக்கும் பொறுப்பை நாம் ஏற்றுள்ளோம் என அவர் தெரிவித்தார். (க-8)

## விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கை ஒரே நாளில் 517 பேர் கைது

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் நேற்று முன்தினம் புதன்கிழமை பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின் போது 517 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

அத்துடன் 29 ஆயிரத்து 563 பேர் பரிசோதிக்கப்பட்டுள்ளதுடன் 21 பேர் குற்றங்களுடன் தொடர்புடைய மற்றும் நேரடியாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். அதேநேரம் கைது செய்யப் பிறப்பிக்கப்பட்ட பிடியாணைகளுக்கமைய 332 பேரும், திறந்த பிடியாணைகளுக்கமைய 169 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை மதுபோதையில் வாகனம் செலுத்திய 399 பேரும் கவனக்குறைவாக வாகனம் செலுத்திய 62 பேரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் பிற போக்குவரத்து குற்றங்களுக்காக 4 ஆயிரத்து 640 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸ் ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (8)

## திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யா/சுழிபுரம் கிழக்கு அமெரிக்க மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலையில், மறைந்த டாக்டர் ஆறுமுகம் ராஜியா மற்றும் திருமதி குமாரி புஷ்பதேவி ராஜியா ஆகியோரின் நினைவாக புதிதாக கட்டப்பட்ட இரண்டு மாடி கட்டடத் திறப்பு விழா இன்று வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் நா.வேதநாயகன், சிறப்பு விருந்தினராக இலங்கை இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் லசந்த ரோட்ரிகோ, கௌரவ விருந்தினராக வலிகாமம் வலயக்கல்வி அலுவலக கல்விப் பணிப்பாளர் திருமதி ஜமுனா ராஜசீலன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (3)

## கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

ஆதிமயிலிட்டி திருவருள்மிகு ஸ்ரீ பூதநாயகி சமேத காசி பூதவராயர் தேவஸ்தான பரிவார மூர்த்திகளாகிய நவக்கிரகம், சனீஸ்வரன், தெட்சனாமூர்த்தி ஆகியவற்றின் பிரதிஸ்ட கும்பாபிஷேகம் எதிர்வரும் 6 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.51 மணிமுதல் காலை 10.30 மணி வரை உள்ள சுபவேளையில் நடைபெறவுள்ளது.

கும்பாபிஷேகத்தை முன்னிட்டு எதிர்வரும் 4 ஆம் திகதி புதன்கிழமை காலை 9.35 மணி முதல் 10.36 மணிவரை கிரியைகள் நடைபெற்று 5 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 6 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை எண்ணெய்காப்பு சாத்தும் நிகழ்வு இடம்பெறும் என ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர். (8)

## பாதிரியார் மீது தாக்குதல் சந்தேக நபர்களுக்குப் பிணை

(கொழும்பு)

கத்தோலிக்க பாதிரியார் ஒருவரைத் தாக்கிய சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்ட ஆறு பொலிஸ் உத்தியோகத்தர்களும் நேற்று பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பான வழக்கு நேற்று வியாழக்கிழமை கம்பஹா நீதவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது சந்தேகநபர்கள் ஒவ்வொருவரையும் தலா ஆறு இலட்சம் ரூபா பெறுமதியான சரீரப் பிணையில் விடுவிக்க கம்பஹா நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

சந்தேக நபர்களான பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு வெளிநாடு செல்லத் தடை விதிக்கப்பட்டுள்ளதுடன், அவர்களது பணி இடைநீக்கத்தைத் தொடர்ந்தும் முன்னெடுக்குமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (க-8)




## உயிர்ப்பலி எடுக்கக் காத்திருக்கும் சுன்னாகம்- கந்தரோடை வீதி

### அதிகாரிகள் கண் திறப்பார்களா?

சுன்னாகம் கந்தரோடை வீதியில் ஸ்கந்தவரோதய கல்லூரிக்கு அண்மையாக ஒரு நடுத்தர வயது மதிக்கத்தக்கவர் தனது துவிச்சக்கர வண்டியை உருட்டிச் சென்று கொண்டிருந்தார்.

"ஏன் ஐயா காற்றுப் போயிட்டுதா?" என அவரைக் கேட்க, "இல்லைத் தம்பி, கிடங்கொண்டுக்குள்ள சைக்கிள் இறங்கி, றிம் நெழிஞ்சு போச்சுது. படுபாவியள் இந்த வீதியைத் திருத்தாமல் விட்டிருக்கினம். எல்லா இடமும் காபபற் போட்ட வைக்கு இந்தச் சின்னத் துண்டை மட்டும் ஏன் போடத் தெரியேல்ல" எனச் சினந்து கொண்டு சென்றார்.

ஆம், சுன்னாகம் கந்தரோடை வீதியில், கந்தரோடை ஸ்ரீ சுப்பிரமுணிய சனசமூக நிலையத்தில் இருந்து மாகியப்பிட்டிச் சந்தி வரையான வீதி மனிதர்கள் பாவிப்பதற்கு உகந்த வீதியாக இல்லை.

இவ்வீதியில் வரலாற்றுச் சிறப்பு மிக்கதும் சுற்றுலாப் பயணிகளை கொண்டதுமான கந்தரோடை பௌத்த விகாரை மற்றும் மிகப் பிரபல்யமான சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி என்பன இருக்கின்றது.

ஆயிரக்கணக்கான பொது மக்கள், மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் பயன்படுத்தும் இவ் வீதி, போர்க் காலத்தில் இருந்த வீதிகளைவிட, மிக மிக மோசமாக இருப்பதை எந்த அதிகாரிகளும் கண்டு கொள்ளாமல் இருப்பது ஏன் என்று புரியவில்லை.

குறித்த வீதியின் சீர்கேட்டினால் இதுவரை பல விபத்துக்கள் ஏற்பட்டுள்ளதுடன் மழைக் காலங்களில் உயிரைக் குடிக்கும் வீதியாக இவ் வீதி சித்தரிக்கப்படுகிறது.

ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அரசியல் பிரமுகர்கள் விஜயம் செய்யப் போகிறார்களெனின் அடித்துப்-பிடித்து வீதிகளையும் பாலங்களையும் புனரமைக்கும் அதிகாரிகள், மாணவர்களின் உயிருடன் விளையாடும் இவ் வீதியை இன்று வரை புனரமைப்புச் செய்யாதது ஏன்?


சுன்னாகம் சந்தியிலிருந்து குறித்த கந்தரோடை சுப்பிரமுணிய சனசமூக நிலையம் வரை காபற் இடப்பட்டிருக்கிறது. அதிலிருந்து வெறும் இரண்டு கிலோ மீற்றர் தூரமான மாகியப்பிட்டிச் சந்திவரையான வீதி மிக மோசம்.

ஆயினும் மாகியப்பிட்டி சந்தியிலிருந்து சண்டிலிப்பாய், சங்கானை மற்றும் அளவெட்டியூடாக மல்லாகம் வரையும் காப்பற் இடப்பட்டுள்ளது.

இந்த இரண்டு கிலோ மீற்றர் வீதிக்கு ஓரவஞ்சகம் செய்தது யார்?

அல்லது அதிகாரிகளின் கண்ணில் இந்த வீதி படவில்லையா?

அல்லது இந்த வீதியில் உயிர் பலி எடுப்பேதும் நடந்த பின்னர்தான் இந்த வீதியைச் சீர்ச்செய்வார்களா? இதுவே இவ்வீதியைப் பயன்படுத்துபவர்களின் கேள்வி.



**அன்பு வாசகர்களே!**

**உங்கள் பிரதேசங்களில் தீர்க்கப்படாமல் இருக்கும் பிரச்சினைகளை 'குறைகேள் அரங்கு' இற்கு புகைப் படத்துடன் எழுதி அனுப்புங்கள்.**

"குறைகேள் அரங்கு",
ஆசிரியர் வலம்புரி,
இல.191 பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

076 636 3378
valampurii@yahoo.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



யாழ் மாவட்டம் வடமராட்சி பருத்தித்துறை தும்பளை நெல்லண்டை

# ஸ்ரீ பத்திரகாளி அம்மன் தேவஸ்தானம்

# புனராவர்த்தன அஷ்டபந்தன நவகுண்டபக்ஷ சமர்ப்பண கும்பாபிஷேக விஞ்ஞாபனம் - 2026

**திருச்சிற்றம்பலம்**

நாடு மிகவுடையாள் நெல்லண்டை எம் பதியுறைவாள்
சாடும் வினைகள் தகர்த்திடும் சால்புடையாள் - பீடுடைய
தக்கன் செய் மமதை வேள்விதனை மாய்த்திடும்
மிக்க மதி நலத்தாள் மலர்ந்தாள் சரண்.

**திருச்சிற்றம்பலம்**

| கர்மாரம்பம் | எண்ணெய்க்காப்பு | கும்பாபிஷேகம் |
|---|---|---|
| 28.01.2026 புதன் காலை 07.53 மணி முதல் | 29.01.2026 வியாழக்கிழமை காலை 08.00 மணிமுதல் மாலை 03.00 மணிவரை | 30.01.2026 வெள்ளிக்கிழமை காலை 07.32 - 08.06 மணி வரை |

அம்பாளின் பக்த அடியார்களே!

இந்துமா சமுத்திரத்தின் மத்தியில் முத்தாக திகழும் இலங்காபுரியின் வடபுலத்தே சைவத்தமிழ் பாரம்பரிய கலை கலாச்சார விழுமியங்கள் தன்னகத்தே கொண்ட யாழ்ப்பாணத்தின் வடமராட்சி தும்பளை நெல்லண்டை பதியில் இத்தி மரத்தடியில் அமர்ந்து இருந்து வேண்டுவோர்க்கு வேண்டுவன எல்லாம் கொடுத்தருளும் அன்னை வீரபத்திரமாகாளியம்மனுக்கு நிகழும் சுபமங்களகரமான விசுவாவசு வருஷம் தை மாதம் 16ம் நாள் (30.01.2026) வெள்ளிக்கிழமை துவாதசி திதியும், திருவாதிரை நட்சத்திரமும், சித்தியோகமும் கூடிய காலை 07.32 - 08.06 மணிவரையுள்ள கும்ப லக்ன சுபவேளையில் எம்பெருமாட்டி வீரபத்திரமாகாளி அம்மனுக்கும் பரிவார தெய்வங்களுக்கும் திருக்குடமுழுக்க மஹா சாந்தி நிகழ அம்பாளின் திருவுள்ளம் கொண்டருளி உள்ளதால் இப்புனித நன்னாளில் அடியார்கள் புனித சீலர்களாக வருகை தந்து பெரும் சாந்தியை தரிசித்து திருவருள் பெற்று சீரும் சிறப்பாக சகல ஸ்வரியமும் இகபர சுகவாழ்வு வாழ எல்லோரையும் வருக வருக என்று அன்புடன் அழைக்கின்றோம்.

## கும்பாபிஷேக கிரியா பூர்வ நிகழ்வுகள்

தை திங்கள் 14ம் நாள் 28.01.2026 புதன்கிழமை

காலை 07.53 மணிமுதல் கர்மாரம்பம், விநாயக பூஜை, புண்ணியாகவாசனம், ஆச்சாரியவர்ணம், அனுக்ஞை, தனலஷ்மி, குபேர பூசை, திரவியசுத்தி, திரவிய விபாகம், பிரதிஷ்டா சங்கற்பம், கணபதி ஹோமம், பேரிடதாடனம், நவக்கிரக ஹோமம், கிராம சாந்தி, பிரவேசபலி, ரக்ஷோக்கண ஹோமம், திசா ஹோமம், வாஸ்து சாந்தி, மிருத் சங்கரணம் கங்கா தீர்த்தம், ஆதித்யாக்னி சங்கரணம், வீபூதி பிரசாதம் வழங்கல்.
மாலை 03.00 மணிமுதல் விநாயகர் வழிபாடு, அங்குரார்பணம், ரட்ஷாபந் தனம், நித்திய துவஜாரோகனம், கடஸ் தாபனம், கலா கர்ஷனம், சனஹோமம், யாக பூசை, நாவாக்னி விபர்ஜனம், பிரதான கும்பங்கள் யாக சாலைப் பிரவேசம், விஷேட பூசை, பூர்ணாகுதி, உபசார பூசை, வேதஸ்தோத்திர திருமுறை பாராயணம், ஆசாரி வஸ்திர சம்பாவனை,
முன் இரவு 07.19 மணிமுதல் 08.06 மணிவரையுள்ள சிம்மலக்ன சுபவேளையில் தீபஸ்தாபனம், கோவாசம், தூபிஸ்தாபனம், யந்திரஸ்தாபனம், விம்பஸ்தாபனம், அஷ்டபந்தனம் நடைபெறும்.

தை திங்கள் 15ம் நாள் 29.01.2026 வியாழக்கிழமை

எண்ணைக்காப்பு 29.01.2026 காலை 08.00 மணிமுதல் மாலை 03.00 மணிவரை

காலை 08.30 மணிமுதல் விநாயகர் வழிபாடு, விஷேட சந்தி, நித்திய துவஜா ரோகனம் பூசை, யாகசாலைபிரவேசம், யாக பூசை, நாவக்னி பூசை, காயத்திரி ஹோமம், விஷேட திரவிய ஹோமம், சகஸ்ர நாம ஹோமம், பூர்ணாகுதி வேத ஸ்தோத்திர திருமுறை பாராயணம், விபூதி பிரசாதம் வழங்கல்

மாலை 04.00 மணிமுதல் கணபதி பூசை விஷேட பஞ்சசௌவ்ய பூசை, பஞ்சாமிர்த பூசை, சோடஷ விம்ப சுத்தி பூசை, நித்திய துவஜா பூசை, யாகப்பிரவேசம், யாக பூசை, நவாக்னி பூசை, ஹோமம், திரிசதி நாம ஹோமம், மூர்த்தி விம்பசுத்தி அபிஷேகம், மூர்த்தி ரட்ஷாபந்தனம், பூர்வாங்க துவார பூசை, சாங்க சடத்துவ நியாசம், பரிவார பரிசாகுதி, நவகுண்ட பரிசாகுதி, பூரணாகுதி, விஷேட தீபாராதனை, வேத ஸ்தோத்திர திருமுறை பாராயணம், சிவாச்சாரியவஸ்திர சம்பாவாசனை விபூதி பிரசாதம், வழங்கல்.

தை திங்கள் 16ம் நாள் 30.01.2026 வெள்ளிக்கிழமை

அதிகாலை 04.30 மணிமுதல் சித்தி விநாயகர் பூசை, புண்ணியாக வாசனம், நித்திய துவஜ பூசை, உபசார தீபாராதனை, சதுர் வேத ஹோமம், ஸ்தோத்திர கீர்த்தனை திருமுறை ராக தாள, சங்கு, சகண்டி, நர்த்தன சமர்ப்பணம். அனந்த கோடி நமஸ்காரம், அந்தர்பலி, பகிர்பலி, தானாதிகள், சர்வமங்கள வாத்திய ஹோச சகிதம் பிரதான கும்ப புறப்பாடு, காலை 07.32 தொடக்கம் 08.06 வரையுள்ள சுபவேளையில் தூபி அபிஷேகம், மகா கும்பாபிஷேகம், திருக்கதவம் காப்பிடல், யாக உத்வாசனம், தசமங்கள தரிசனம், ஆச்சாரிய சம்பாவனை, ஆசியுரை, மகா அபிஷேகம், விசேட பூசை அன்னதானம், நடைபெறும்

### கும்பாபிஷேக குருமார்கள் விபரம்

விண்ணில் இருந்து அருள்ஆசி வழங்கும் நெல்லண்டை பத்திரகாளி அம்மன், வீரமாகாளி அம்மன், பரம்பரை பூசகர், ஆதீனகர்த்தா தேவஸ்தானாதிபதி அமரர் தியாக.சோமாஸ்கந்த ராஜாக்குருக்கள், அமரர் வே.இராமலிங்கக்குருக்கள் ஆசியுடன்

**சர்வபோதகாச்சாரியர்**
"ஆகம பிரவீனா, கிரியாகிரம ஜோதி"
சிவஸ்ரீ.பா.பாலமனோன் குருக்கள்
"ஆகம கலா மையம் தாபகர்"
(ஏழாலை பாதாள வைரவர் கோவில் பிரதமகுரு)

**கும்பாபிஷேக பிரதமகுரு**
"சிவாகம கிரியாமணி தேவிபூஜா துரந்தர்"
சிவஸ்ரீ சோமாஸ்கந்த தனஞ்சயக்குருக்கள்
(பரம்பரை குருக்கள், ஆதீன கர்த்தா பிரதமகுரு)
(நெல்லண்டை பத்திரகாளி அம்மன்,ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தேவஸ்தானம்)

**"அம்பாள் நித்திய பூஜாதுரந்தரர்"**
சிவஸ்ரீ. இராம சுந்தரலிங்கக்குருக்கள்
பிரதமகுரு ஆதீனகர்த்தா நெல்லண்டை பத்திரகாளி அம்மன்

**ஆலய நித்திய உதவி அர்ச்சகர்கள்**
சிவத்திரு.சுந்தர்.விபூசன் ஐயா
சிவத்திரு சுந்தர்.திரிஷ்யந்த் ஐயா

**சாதகாசிரியர்கள்**
"சங்கீத சாதகர்"
சிவஸ்ரீ. இ.கணேஸ்வரக் குருக்கள்
(குரும்பைசிட்டி முத்துமாரி அம்மன் கோவில் பிரதமகுரு)
"சாதக சாகரம்"
சிவஸ்ரீ.பா.நரேந்திராக் குருக்கள்
(கொம்மந்தறை மனோன்மணி அம்மன் பிரதம குரு)
சிவஸ்ரீ.பா.நகுலேஸ்வராக் குருக்கள்
(கம்பர்மலை தான்தோன்றி விநாயகர் கோவில் பிரதமகுரு)

**நவகுண்டகுருமணிகள்**
சிவஸ்ரீ.வே.யோகராசாக் குருக்கள் (ஓமந்தை)
சிவஸ்ரீ.வை.சிவராசாக்குருக்கள் (தும்பளை)
சிவஸ்ரீ.சி.குகராசாக்குருக்கள் (கெருடாவில்)
சிவஸ்ரீ.வை. இராமேஸ்வரக்குருக்கள் (மந்திகை)
சிவஸ்ரீ.பா.மனோகரக்குருக்கள் (அச்சுவேலி)
சிவஸ்ரீ.இ.கிரிசாந்தக் குருக்கள் (திருநெல்வேலி)
சிவஸ்ரீ.ந.சிவதர்ஷக்குருக்கள் (நல்லூர்)
சிவஸ்ரீ.சிவதாசக்குருக்கள் (கல்வியங்காடு)
சிவஸ்ரீ.முருகதாசக் குருக்கள் (கட்டுவன்)
சிவஸ்ரீ.வி.வித்தியாபரக் குருக்கள் (மந்திகை)
சிவஸ்ரீ.ச.கஜமுகக்குருக்கள் (கரணவாய்)

**அருள் ஆசி வழங்கும் குருமணிகள்**
சிவஸ்ரீ.சோமாஸ்கந்த தண்டபாணிக தேசிகர்
(அனைத்துலக இந்துமத குருபீடாதிபதி)
(வல்வை முத்துமாரியம்மன் கோவில் பிரதமகுரு)
சிவஸ்ரீ.வே.தியானந்தராசாக் குருக்கள்
(தும்பளை முருகன் கோவில் பிரதமகுரு)
சிவஸ்ரீ.கிருபானந்த குருக்கள்
(சோதிடபூசணம்,
மண்டுவில் சோலை அம்மன் பிரதம குருக்கள்)

**கும்பாபிஷேகம் சிறப்புற வாழ்த்துவபவர்கள்**
சிவஸ்ரீ.சண்முகரத்தினக்குருக்கள்
(திருகோணமலை சிவன் கோவில்)
சிவஸ்ரீ.திருஞானசம்பந்தக்குருக்கள்
(குமுழமுனை கற்பக விநாயகர் கோவில் பிரதமகுரு)
சிவஸ்ரீ.ச.பிரசன்னாக்குருக்கள்
(திருகோணமலை சிவன் கோவில் பிரதமகுரு)

**உதவி அர்ச்சகர்கள்**
சிவத்திரு.இ.கணேசலிங்கம் ஐயா (நாயன்மார்க்கட்டு)
சிவத்திரு.பிரசன்னா ஐயா (வேலணை)
சிவத்திரு.நி.நிமல்ராஜ் ஐயா (வல்வை)
சிவத்திரு.எ.எழில் ஐயா (முல்லை)
சிவத்திரு.ஞா.துவாரகன் ஐயா (சங்கரத்தை)
சிவத்திரு.க.பவித்திரன் ஐயா (மட்டக்களப்பு)

**வேதம்**
"ஆகமவேத வித்பன்னர்"
சிவஸ்ரீ.அ.ஐயப்பதாசக்குருக்கள்
(கட்டுவன் ஐயப்பன் கோவில் பிரதம குரு)

| வர்ண வேலை | கட்டடவேலை | கூரை வேலை | சிற்பாசாரியார் | தெறோசோ பதித்தல் | ஒலி,ஒளி அமைப்பு | சுவாமி அலங்காரம் | மங்கள வாத்தியம் |
|---|---|---|---|---|---|---|---|
| தரன் ஆட்ஸ் | செல்வகுமார் தும்பளை | கி.விஜயராசா பொலிகண்டி | க.ததீஸ்கரன் அராலி | கி.மோகனசுந்தரம் | இ.பரமதாஸ் தும்பளை | வை.ரங்கேஸ்வரன் | சிவசுப்பிரமணியம் குழுவினர். |

குறிப்பு: கும்பாபிஷேகதினத்திலும் அதற்கு முன்னதாக நடைபெறும் கிரியைகளிலும் கலந்து கொண்டு தங்களாலான சிவத்திரவியங்களை கொடுத்தும் அம்பாளின் இஷ்ட சித்திகளையும் பெற்று வாழ்வில் சீரும் சிறப்புடன் வாழ்வீர்களாக

தொடர்ந்து மண்டலாபிஷேகம் 45 நாட்கள் நடைபெறும்

சுபம்

இங்ஙனம்
தும்பளை நெல்லண்டை அம்மன் கோவில்
பிரதமகுருக்கள்

(2000)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வு இன்று பிற்பகல் 1.30 மணியளவில் வலிகாமம் தென் மேற்கு மானிப்பாய் பிரதேச சபையின் ரவீந்திரன் கலாசார மண்டபத்தில் சபையின் தவிசாளர் க.யெசீதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ப.பார்த்தீபன் பிரதம விருந்தினராகவும், கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் அதிபர் ச.லலீசன், யா/ஆனைக்கோட்டை அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையின் அதிபர் சி.மதிபாலன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

நிகழ்வில் வாசிப்பு சம்பந்தமான கலை நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன. (8)

## 6 துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் பதிவு

(கொழும்பு)


2026 ஆம் ஆண்டின் ஜனவரி மாதம் 1 ஆம் திகதியிலிருந்து 28 ஆம் திகதி வரையான காலப் பகுதிக்குள் 6 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்த துப்பாக்கிச் சூட்டு சம்வங்களில் 5 பேர் உயிரிழந்துள்ளதுடன் 4 பேர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த துப்பாக்கி சூடுகளில் பெரும்பாலானவை பாதாள உலக குழுக்களுக்கிடையிலான தகராறு காரண மாக இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் மேலும் தெரி வித்துள்ளனர். (8)


JAFFNA EDUCATION FAIR 2026
Your Future Begins Here...
6th EDITION

யாழ் உயர்கல்விக் கண்காட்சி

1 MORE DAY TO GO



கண்காட்சியின் சிறப்பு அம்சங்கள்

- 40ற்கும் மேற்பட்ட உயர்கல்வி நிறுவனங்களுடனான சந்திப்பு
- புகழ்பெற்ற உள்நாட்டு வெளிநாட்டு உயர்கல்வி நிறுவனங்களின் வருகை
- வெளிநாடு செல்ல காத்திருக்கும் அனைவருக்கும் ஆலோசனை
- பாடநெறிகளுக்கான கட்டணங்களின் விலைக்கழிவு மற்றும் புலமைப்பரிசில்கள்
- இலவச தொழில் வழிகாட்டலும் ஆலோசனைகளும்

- கா.பொ.த உயர்தரப் பரீட்சையை நிறைவு செய்து பெறுபேற்றுக்காக காத்திருக்கும் மாணவர்களுக்கு...
- தமது பிள்ளைகளுக்கு பொருத்தமான உயர்கல்வி துறையை தெரிவுசெய்து கொடுக்கவிருக்கும் பெற்றோர்களுக்கு...
- தமது தொழிலை மேம்படுத்தி அதற்கான மேலதிக பட்டப்படிப்புகளை பெற்றுக்கொள்ள காத்திருப்பவர்களுக்கு...
- எதிர்காலத்தில் உயர்தரப் பரீட்சைக்கு தோற்றவிருக்கும் மாணவர்களுக்கு...

JAN 31st FEB 01st 2026
VALAMPURI HOTEL JAFFNA
9.00 am to 5.00 pm
அனுமதி இலவசம்
For more details +94 77 565 6633

Platinum Sponsor: BCAS INTERNATIONAL UNIVERSITY PLACEMENTS
Gold Sponsors: BCAS CAMPUS, Imperial College of Business Studies, Achievers International Campus, iCS Study Overseas
Silver Sponsors: ESU JAFFNA, INFORMATICS INSTITUTE OF TECHNOLOGY
Print Media Partner: வலம்புரி
Official Banking Partner: Sampath Bank WE PRESENT YOUR FUTURE
Supported by: Provincial Department of Education Northern Province
Organized by: EVOLUTION EVENTS & EXHIBITIONS


# இராசிபலன்

30.01.2026
தை 16, வெள்ளிக்கிழமை
துவாதசி முற்பகல் 10.13 மணிவரை
திருவாதிரை பின்னிரவு 3.11 மணிவரை

சுபநேரம் 6.36-8.06 மணிவரை
இராகுகாலம் 11.06-12.36 மணிவரை
பிரதோச விரதம்

சந்திராஷ்டமம்- அனுசம்.

வளவன்

**மேஷம்** குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், சவால்களை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள்.

**கடகம்** தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கலாம்.

**துலாம்** உறவினர் வழியில் மனநிறைவான செய்தியொன்று வந்து சேரலாம், வெளியூர் பயணங்களால் ஆதாயமுண்டு, ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும்.

**மகரம்** பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், வங்கி சேமிப்பை அதிகரிக்கும் எண்ணம் உருவாகும், போசன சுகமுண்டு.

**ரிஷபம்** சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, சுப செய்திகள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், வியாபார விருத்தியுண்டு.

**சிம்மம்** பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**விருச்சிகம்** ஆரோக்கியத்தில் அதிகவனம் செலுத்த வேண்டிய நாள், பயணங்களின்அ போது விழிப்புணர்வு அவசியம், மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும்.

**கும்பம்** நட்பு வட்டம் விரிவடையும் நாள், பூர்வீக சொத்து சமபந்தப்பட்ட வகைகளில் நன்மையுண்டு, சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும், புதிய பொருட்சேர்க்கையுண்டு.

**மிதுனம்** பொதுநல ஈடுபாட்டில் புகழ் பெறுவீர்கள், ஒரு வகையில் சிக்கனமாக இருந்தாலும் மற்றொரு வகையில் விரயங்கள் ஏற்படலாம்.

**கன்னி** புதிய திட்டங்கள் தீட்டி தொழிலில் ஆதாயம் காண முற்படுவீர்கள், காலை நேரத்திலேயே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம்.

**தனுசு** நண்பர்கள் சந்திப்பால் பரவசமடைவீர்கள், ஏட்டிக்குப் போட்டியாக இருந்தவர்கள் மனம்மாறுவர், புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, போசனசுகமுண்டு.

**மீனம்** உறவினர்கள் வழியில் அன்புத் தொல்லைகள் ஏற்படலாம், அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.

வயதானவர்களுக்கு அவர்கள் கேட்பதற்கு முன்னர் கொடுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புகையிலை, மதுப் பாவனையால் 22 ஆயிரம் பேர் உயிரிழப்பு

## தேசிய அதிகார சபை தெரிவிப்பு

(கொழும்பு)

**புகையிலை மற்றும் மதுபானப் பயன்பாடு காரணமாக இலங்கையில் ஆண்டுதோறும் சுமார் 22 ஆயிரம் பேர் உயிரிழப்பதாக புகையிலை மற்றும் மதுபானம் மீதான தேசிய அதிகார சபையின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.**

பாராளுமன்ற உறுப்பினர் நிஹால் அபேசிங்க தலைமையில் கடந்த 21 ஆம் திகதி நடைபெற்ற சுகாதாரம், ஊடகங்கள் மற்றும் மகளிர் வலுவூட்டல் தொடர்பான துறைசார் மேற்பார்வைக் குழுவின் போதே இந்தத் தகவல்கள் வெளியிடப்பட்டன.

புகையிலை மற்றும் மதுபானம் பாவனையினால் ஏற்படும் நோய் சிகிச்சைக்காக ஆண்டுதோறும் 225 - 240 பில்லியன் ரூபா செலவிடப்படுவதாகவும் தெரிவித்துள்ளனர்.

இந்தத் தீய பழக்கங்களிலிருந்து மக்களைப் பாதுகாப்பதற்கான சட்ட விதிகளுடன் கூடிய புகையிலை மற்றும் மதுபானம் மீதான தேசிய அதிகார சபை சட்டத்தைத் திருத்துவதற்கான பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

உலகில் 104 நாடுகள் சிகரெட்டுகளைத் தனித்தனியாக (சில்லறையாக) விற்பனை செய்வதைத் தடை செய்துள்ளன.

அந்தச் சட்டத்தை இலங்கையிலும் நடைமுறைப்படுத்துவதன் அவசியத்தை அதிகாரிகள் வலியுறுத்தியுள்ளனர்.

சிகரெட்டுகளைத் தனித்தனியாக விற்பனை செய்யும் போது, அதன் பக்கெட்டுகளில் உள்ள சுகாதார எச்சரிக்கை படங்கள் நுகர்வோருக்குத் தெரிவதில்லை என அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.

துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவர், அதிகார சபையின் முன்மொழியப்பட்ட சட்டத் திருத்தங்கள் மற்றும் ஏனைய திட்டங்களுக்குத் தேவையான முழுமையான ஒத்துழைப்பை வழங்கத் தயாராக இருப்பதாக உறுதியளித்துள்ளார். (8)

## தைப்பூசம்

(யாழ்ப்பாணம்)

யாழ் வண் வடகிழக்கு கலட்டி வீரகத்தி பிள்ளையார் தேவஸ்தானத்தில் தைப்பூசத்தை முன்னிட்டு எதிர்வரும் 1 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 4.30 மணிக்கு விஷேட பூஜை நடைபெறும் என ஆதீனகர்த்தாவும், பிரதம குருவுமாகிய சிவஸ்ரீ து.விவேகானந்தக்குருக்கள் அறிவித்துள்ளார். (8)

## கற்றல் உபகரணங்கள் வழங்கல்

(அராலி)

யா/ இணுவில் இந்துக் கல்லூரியில் இணுவில் கனடா அமைப்பு குழுவின் ஏற்பாட்டில் தரம் 1 இல் இணையும் மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் 16 ஆயிரம் ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு இணுவில் பொது நூலக தகவல் தொழில்நுட்ப விரிவுரை மண்டபத்தில், பொது நூலகத் தலைவர் ம.கஜந்தரூபன் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது. (8-104)

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பணம்)

வேலணை சரவணை கிழக்கு பள்ளம்புலம் முருகமூர்த்தி சனசமூக நிலைய வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் 1 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் நிலைய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

எனவே உறுப்பினர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (8)


## படகு கவிழ்ந்ததில் இளைஞன் மாயம்!

(கொழும்பு))

ஏறாவூர் - களுவன்கேணி பகுதியில், மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் நீரில் மூழ்கி ஒருவர் காணாமல் போயுள்ளதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்துள்ளனர். நேற்று முன்தினம் புதன்கிழமை பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டிற்கமைய விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காணாமல்போனவர், களுவன்கேணி பகுதியைச் சேர்ந்த 21 வயதுடைய இளைஞர் என தெரிவிக்கப்படுகிறது.

நீரில் மூழ்கி காணாமல் போன நபரைக் கண்டுபிடிக்க ஏறாவூர் பொலிஸார் தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். (8)



புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சினால் ஆண்டு தோறும் நடத்தப்படும் அரச உத்தியோகத்தர்களின் ஆக்கத்திறன் போட்டியில் மக்கள் வங்கி ஸ்ரான்லி வீதிக்கிளையில் பணியாற்றும் யாழைச் சேர்ந்த கவிஞர் தம்பித்துரை ஐங்கரன் அவர்கள் பாட லாக்கத்தில் தேசிய அளவில் முதலிடம் பிடித்ததுடன் சிறுகதை ஆக்கத்தில் ஆறுதல் பரிசையும் பெற்றுள்ளார்.

அலரிமாளிகையில் அண்மையில் இடம்பெற்ற விருது வழங்கும் விழாவில் அவருக்கான விருது வழங்கபட்டதுடன் காசோலைப் பரிசும் சான்றிதழும் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

## பருத்தித்துறை பிரதேச சபையில் பிரஜாசக்திக்கு எதிராக தீர்மானம்


(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை பிரதேச சபை மாதாந்த அமர்வு நேற்று முன்தினம் புதன்கிழமை தவிசாளர் உதயகுமார் யுகதீஸ் தலைமையில் நடைபெற்றது. இதன்போது, பிரஜாசக்திக்கு எதிராக தீர்மானம் ஒன்றினைத் தவிசாளர் சபையில் முன்வைத்தார்.

குறித்த தீர்மானம் வாக்கெடுப்புக்கு விடப்பட்ட போது, பிரஜாசக்திக்கு எதிராக 10 உறுப்பினர்களும், ஆதரவாக 4 உறுப்பினர்களும் வாக்களித்ததுடன், 5 உறுப்பினர்கள் நடுநிலை வகித்தனர். ஒரு உறுப்பினர் சபை அமர்வில் கலந்து கொள்ளவில்லை.

பருத்தித்துறை பிரதேச சபை 20 உறுப்பினர்களைக் கொண்டது. அதில் பிரஜாசக்திக்கு எதிராக தமிழரசுக் கட்சியின் 9 உறுப்பினர்களும், ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் ஒரு உறுப்பினரும் ஆதரவாக வாக்களித்தனர்.

தேசிய மக்கள் சக்தியின் 4 உறுப்பினர்கள், பிரஜாசக்திக்கு ஆதரவாக வாக்களித்தனர். ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் 4 உறுப்பினர்களும், சுயேட்சை குழுவின் ஒரு உறுப்பினரும் வாக்களிப்பில் கலந்து கொள்ளாது நடுநிலை வகித்துள்ளனர். (8-33)



யாழ் வடமராட்சி கிழக்கு உடுத்துறையில் இலங்கை செஞ் சிலுவை சங்கத்தின் யாழ்ப்பாணக் கிளையின் ஏற்பாட்டில் இலவச மருத்துவ முகாம் ஒன்று அண்மையில் இடம்பெற்றது.

(படம்:- மகாலிங்கம்)

## சந்தைகளில் நேற்றைய விலை

பொருளாதார மத்திய நிலையம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மட்டுவில் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 500 | 300 | 500 | 280 | 280 |
| உருளைக்கிழங்கு | 160 | 200 | 150 | 160 | 160 | 350 |
| பச்சைமிளகாய் | 450 | 500 | 500 | 500 | 450 | 450 |
| தக்காளி | 500 | 550 | 600 | 600 | 550 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 200 | 200 | 150 | 200 | 100 |
| கோவா | 250 | 250 | 300 | 300 | 250 | 220 |
| கரட் | 350 | 420 | 400 | 450 | 450 | 380 |
| பூசணி | 100 | 120 | 120 | 140 | 100 | 80 |
| புடோல் | 250 | 250 | 300 | 250 | 250 | 220 |
| வாழைக்காய் | 200 | 190 | 150 | 250 | 150 | 120 |
| சின்ன வெங்காயம் | 300 | 300 | 300 | 350 | 150 | 340 |
| பெரிய வெங்காயம் | 180 | 200 | 200 | 200 | 180 | -- |
| பாகற்காய் | 600 | 500 | 700 | 600 | 500 | 450 |
| வெண்டக்காய் | 300 | 400 | 300 | 400 | 300 | 350 |
| கருணைக் கிழங்கு | 350 | 260 | 300 | 300 | -- | 200 |
| பயற்றங்காய் | 600 | 500 | 800 | 600 | 500 | 400 |
| லீக்ஸ் | 350 | 400 | 300 | 450 | 450 | 360 |
| பீற்றூட் | 300 | 300 | 600 | 400 | 450 | 300 |
| கறிமிளகாய் | 1000 | 700 | 600 | 900 | 600 | 850 |
| முருங்கைக்காய் | -- | -- | 2000 | -- | -- | -- |
| போஞ்சி | 600 | 500 | 600 | 450 | 400 | 400 |
| கத்தரிதம்புள்ள | 250 | 250 | 300 | 450 | -- | -- |
| கீரை - 1 பிடி | 100 | 40-160 | 150 | 120 | -- | 80 |
| தேசிக்காய் | 300 | 150 | 200 | 200 | 200 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 120 | 180 | 150 | 100-150 | -- | 110 |
| இராசவள்ளி | 500 | 450 | 400 | 400 | -- | 400 |
| வெங்காயப்பூ | 400 | 400 | 400 | 400 | -- | -- |
| முள்ளங்கி | 100 | 200 | 200 | 200 | 200 | 130 |
| பொன்னாங்காணி | 80 | 50 | 150 | 80 | -- | 50 |
| வல்லாரை | 60 | 50 | 100 | 100 | -- | 70 |
| ஈரப்பலா | 100 | 150 | 100 | 200 | -- | 90 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்.

## முருகையா நகுலேஸ்வரன்

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

திதி – திரியோதசி

தோற்றம்: 21.01.1941 மறைவு: 15.01.2022



மகத்தான உங்கள் வாழ்வு முடிந்து ஆண்டு நான்கு கடந்ததுவோ!
ஜெகத்தினில் வாழ்வாங்கு வாழ்ந்திட்ட காலமும் முடிந்ததுவோ!
பகட்டான வாழ்வின்றிப் பக்குவமாய் வாழ்ந்திருந்தீர் – உங்கள் திகட்டாத செயல்களினால்
நெஞ்சமெல்லாம் சேர்ந்திருப்பீர்!

(6696)

185/1, கில்னர்லேன், யாழ்ப்பாணம்

குடும்பத்தினர் 021 221 6742

---

ஓம் ஸ்ரீ சாயிராம்

# பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் அற்புதங்களைப் பகிர்ந்து கொள்ளும் "அனந்த" திரைப்படக் காட்சி

இடம் :– பகவான் ஸ்ரீசத்தியசாயி சேவா நிலையம், யாழ்.மத்தி
(புட்டபர்த்தி பிரசாந்தி நிலையத்துடன் இணைக்கப் பெற்றது)
15/12, சங்கிலியன் வீதி, நல்லூர்.

காலம்:– 2026.02.01 ஞாயிறு காலை 9.15 மணிக்கு

குறிப்பு:–
- இத்திரைப்படம் பகவானின் 100 ஆவது அவதார தினத்தினை முன்னிட்டு புட்டபர்த்தி பிரசாந்தி நிலையத்தால் வெளியிடப் பெற்றது.
- திரைப்பட நிறைவில் நாராயண சேவை (மதிய உணவு) வழங்கப்பெறும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சமஸ்த்த லோகா சுகினோ பவந்து

(6694)

தலைவர், பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையம், யாழ். மத்தி

---



## நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்



# தைப்பூசத் திருவிழா

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயத்தில் **"தைப்பூசத் திருவிழா"** மிகவும் சிறப்புற நடைபெற அன்னையின் திருவருள்பாலித்துள்ளது. எதிர்வரும் 01.02.2026ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப.10.30 மணிக்கு அம்பிகைக்கு **108 சங்காபிஷேகம்** நடைபெற்று அதைத் தொடர்ந்து உச்சிக்காலப் பூசையும் வசந்தமண்டப பூசையும் இடம்பெற்று வேத தோத்திர திருமுறை பாராயணங்கள் நிறைவு பெற்றதும் விசேட மங்கள வாத்திய சகிதம் அம்பிகை மதியம் 1.30 மணியளவில் அழகிய திருமஞ்சத்தில் எழுந்தருளி அடியார்களுக்கு அருள்பாலிக்கும் அருட்காட்சி இடம்பெறும்.

- அடியார்களுக்கான விசேட பேருந்து படகுச்சேவைகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.
- அடியார்களுக்கான தாகசாந்தி தம்பையா தாகசாந்தி நிலையத்தினரால் வழங்கப்படும்.
- அடியார்களின் அரும்பசி தீர்க்கும் அன்னதானப்பணி ஆலய தினசரி அன்னதான மண்டபத்திலும், ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி அன்னதான மண்டபத்திலும் நடைபெறும்.
- அபிஷேகத் திரவியங்கள், பால், இளநீர் வழங்க விரும்பும் அடியார்கள் மு.ப.11.00 மணிக்கு முன் ஆலயத்தில் வழங்கவும்.

தைப்பூசத்திருநாளில் அன்னையின் ஆலயம் வந்து தரிசித்து அவளின் திருவருட் பேரருளைப் பெற்றேகுமாறு அன்போடு அழைக்கிறோம்.

"மைப்பூசும் ஒண்கண்மட நல்லார் மாமயிலை
கைப்பூசு நீற்றான் கபாலீச்சரம் அமர்ந்தான்
நெய்ப்பூசும் ஒண்புழுக்கல் நேரிழையார் கொண்டாடும்
தைப்பூசம் காணாமல் போதியோ பூம்பாவாய்" – (தேவாரம்)

31.01.2026 சனிக்கிழமை அம்பிகையின் ஆலய மகாகும்பாபிஷேக தின 1008 சங்காபிஷேகமும் பூசை ஆராதனைகள் இடம்பெற்று சுவாமி வீதிவலம் வரும் திருக்காட்சியும் இடம் பெறும்.

அன்னையின் பணியில் –ம. அம்பிகைபாகன்
கௌரவ செயலாளர், அறங்காவலர் சபை,
ஸ்ரீநாகபூஷணி அம்மன் கோவில், நயினாதீவு

(C-4906)

---

# கும்பாபிஷேகம்

(கரணவாய்)

பருத்தித்துறை தும்பளை நெல்லண்டை அருள்மிகு ஸ்ரீ பத்திர காளியம்மன் ஆலய புனராவர்த்தன அஷ்டபத்தன சமர்ப்பண கும்பாபிஷேகம் இன்று வெள்ளிக்கிழமை காலை 7.30 மணி தொடக்கம் 08.06 மணி வரையான சுப வேளையில் நடைபெறவுள்ளது.

கோயிலின் பரம்பரைக் குருக்களும் ஆதீன கர்த்தாவும் பிரதம குருவுமான "சிவகாம கிரியாமணி தேவிபூஜா துரந்தர்" சிவ ஸ்ரீ சோமஸ்கந்த தனஞ்சய குருக்கள் பிரதம குருவாக இருந்து கும்பாபிஷேகத்தை நடத்தி வைப்பார். (8-60)

# மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யா/சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு பாடசாலை மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

பாடசாலை அதிபர் எம்.சி.சுதாகரன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக சாவகச்சேரி கலால் பொறுப்பதிகாரி சுப்பிரமணியம் யாதவன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (8)

---

# கண்ணீர் அஞ்சலி



ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்தில் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றும் **திரு.ஆனந்தராசா கோகுலன்** அவர்களின் அன்பு மாமனார்

அமரர்.

## நாகலிங்கம் இரகுநாதன்

அவர்கள் இறைபதம் அடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவருடைய ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(6688)

யாழ்.மாவட்ட கிராம அபிவிருத்தித் திணைக்கள உத்தியோகத்தர்கள் நலன்புரிச் சங்கம்.

---

**2026 ஆம் ஆண்டு மார்ச் 01 ஆம் திகதி தொடக்கம் 2027 பெப்ரவரி 28 ஆம் திகதி வரை கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலை - நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் சிற்றுண்டிச்சாலை, வாகனப் பாதுகாப்பு நிலையத்தினை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல்**

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையின் சிற்றுண்டிச்சாலை, வாகனப் பாதுகாப்பு நிலையத்தினை 01.03.2026ஆம் திகதி தொடக்கம் 28.02.2027 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்காக கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையின் நோயாளர் நலன்புரிச் சங்கத்தினால் கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரங்களை 02.02.2026ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் 12.02.2026ஆம் திகதி வியாழக்கிழமை வரை அலுவலக நாட்களில் வைத்தியசாலையிலுள்ள நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் அலுவலகத்தில் காலை 9.00 மணி தொடக்கம் பி.ப 4.00 மணிவரை கீழ்வரும் மீளளிப்பு செய்யப்படாத தொகையைச் செலுத்தி கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

| சேவை விபரம் | மீளளிப்பு செய்யப்படாத தொகை | மீளளிப்புத் தொகை |
|---|---|---|
| வாகனப் பாதுகாப்பு நிலையம் | 2000.00 | 200,000.00 |
| சிற்றுண்டிச்சாலை | 2500.00 | 300,000.00 |

பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் பத்திரங்களை 13.02.2026 ஆம் திகதி வெள்ளிக்கிழமை 4.00 மணிக்கு முன்னர் நேரடியாக மீளளிப்புத் தொகையினைச் செலுத்தி ஒப்படைக்கப்படல் வேண்டும். மீளளிப்புத் தொகை பணமாக மட்டுமே செலுத்த முடியும். குறித்த திகதி, நேரத்தின் பின் வழங்கப்படும் விண்ணப்பங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. கேள்விப் பத்திரங்கள் யாவும் திரு. கணேஸ் விஜயசேகரன், தலைவர், நோயாளர் நலன்புரிச் சங்கம், மாவட்ட பொது வைத்தியசாலை, கிளிநொச்சி எனும் முகவரியிடப்பட்டு கடித உறைக்குள் உள்ளடக்கி பொறியிட்டு (Sealed) அதன் இடது பக்க மேல் மூலையில் **2026 ஆம் ஆண்டு பங்குனி மாதம் தொடக்கம் 2027 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் வரை கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் சிற்றுண்டிச்சாலை/வாகனப் பாதுகாப்பு நிலையத்தினை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி கோரல்** விண்ணப்பம் என குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

சிற்றுண்டிச்சாலை கேள்விப் பத்திரங்கள் 14.02.2026 ஆம் திகதி (சனிக்கிழமை) மு.ப 10.00 மணிக்கும் வாகனப் பாதுகாப்பு நிலைய கேள்விப் பத்திரம் 14.02.2026ஆம் திகதி (சனிக்கிழமை) மு.ப 11.00 மணிக்கும் கேள்வி சபையினதும் சட்டவாளர் முன்னிலையிலும் திறக்கப்படும். அத்தருணம் விண்ணப்பதாரிகள் நிச்சயமாக சமூகமளித்தல் வேண்டும். தவிர்க்க முடியாத சூழ்நிலையில் விண்ணப்பதாரி பங்குகொள்ள முடியாதுவிடின் தங்கள் பிரதிநிதியை உறுதிப்படுத்தப்பட்ட கடிதம் மூலம் பங்குகொள்ளக்கூடியவாறு அனுப்பி வைக்க முடியும். இவ்விடயம் பற்றி தனிப்பட்ட அறிவித்தல் வழங்கப்படமாட்டாது. தங்களால் வழங்கப்படும் மீளளிப்பு தொகையை 03.03.2026 ஆம் திகதி தொடக்கம் 06.03.2026 ஆம் திகதி வரைக்குட்பட்ட காலப்பகுதியில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ள முடியும். காசோலை மூலம் மட்டுமே மீளளிப்புத் தொகை வழங்க முடியும்.

திரு.க.விஜயசேகரன்,
தலைவர்,
நோயாளர் நலன்புரிச்சங்கம்.


(C-4907)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## இணையவழி மோசடி

## சீனாவில் 11 பேருக்கு மரண தண்டனை நிறைவேற்றம்



(பீஜிங்)

மியான்மாரில் ஆள்கடத்தலில் ஈடுபட்ட 11 பேருக்கு சீன அரசாங்கம் மரண தண்டனையை நிறைவேற்றியுள்ளது.

மியான்மாரின் எல்லைப் பகுதியில் ஆயிரக்கணக்கானவர்களைக் கடத்திச் சென்று, அவர்களை அடிமைகளாக வைத்து இணைய மோசடிகளில் ஈடுபடுத்தி வந்த பிரபல குடும்பத்தைச் சேர்ந்த 11 உறுப்பினர்களுக்குச் சீன அரசாங்கம் மரணதண்டனையை நிறைவேற்றியுள்ளது.

இந்தக் கும்பல், சட்ட விரோத ஆயுதக் குழுக்களைப் பராமரித்தல் மற்றும் கொலைச் சம்பவங்களில் ஈடுபடுதல், வேலை வாய்ப்பு தருவதாகக் கூறி ஆயிரக்கணக்கான சீன மற்றும் ஏனைய நாட்டு இளைஞர்களைக் கடத்திச் சென்று, மோசடி மையங்களில் கட்டாயப்படுத்தி வேலை வாங்கல், இலக்குகளை அடையாத ஊழியர்களைச் சித்திரவதை செய்தல் மற்றும் சிறைவைத்தல் மற்றும் முதலீட்டு மோசடிகள் மூலம் சீனாவிற்குள் பாரிய பொருளாதாரப் பாதிப்பை ஏற்படுத்தியிருந்தனர்.

இந்நிலையில் கடந்த 2023ஆம் ஆண்டின் பிற்பகுதியில், சீன அரசாங்கம் மியான்மார் இராணுவ அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுத்ததைத் தொடர்ந்து, இந்தக் குடும்பத்தின் முக்கிய உறுப்பினர்கள் சீனாவிற்குக் கடத்தப்பட்டு ஒப்படைக்கப்பட்டனர்.


சீன நீதிமன்றத்தில் இவர்களுக்கு எதிராக நடத்தப்பட்ட விசாரணையில், இவர்களது குற்றங்கள் மனிதாபிமானமற்றவை மற்றும் நாட்டின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலானவை என நிரூபிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து வழங்கப்பட்ட தீர்ப்பின் அடிப்படையில், அக்குடும்பத்தின் தலைவர்கள் உள்ளிட்ட 11 பேருக்கு தற்போது மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் உறுதிப்படுத்தியுள்ளன.

இந்த மரண தண்டனை நிறைவேற்றம், எல்லை தாண்டிய குற்றங்களில் ஈடுபடுவோருக்கு விடுக்கப்பட்ட ஒரு கடும் எச்சரிக்கையாகப் பார்க்கப்படுகிறது. (3)

## மத்திய கிழக்கில்

## ஈரானுக்கு இறுதி எ




இது தொடர்பாக ட்ரம்ப் தனது ட்ரூத் சோசியல் வலைத்தளப் பதிவில், “வெனிசுலாவில் பணி முடிந்ததுபோல் ஈரானிலும் விரைவாகச் செயற்பட அமெரிக்க இராணுவம் தயாராகவுள்ளது.

நேரம் கடந்து கொண்டிருக்கிறது.

அணு ஆயுதங்களைத் தவிர்த்து, அனைவருக்கும் நன்மை பயக்கும் நியாயமான ஒப்பந்தத்திற்கு ஈரான் வரவேண்டும்.

இல்லையெனில் அடுத்த தாக்குதல் மிகவும் மோசமானதாக இருக்கும்” என்று தெரிவித்துள்ளார்.

## கொலம்பிய விமான விபத்தில் 15 பேர் உயிரிழப்பு!




(பொகோட்டா)

கொலம்பிய சட்டமன்ற உறுப்பினர் மற்றும் காங்கிரஸ் வேட்பாளர் உட்பட 15 பேரை ஏற்றிச் சென்ற ஒரு சிறிய பயணிகள் விமானம் வடகிழக்கு கொலம்பியாவில் விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் விமானத்தில் பயணித்த எவரும் உயிர் பிழைக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

பீச்கிராஃப்ட் 1900 என்ற இந்த விமானம், அரசுக்கு சொந்தமான சடேனா விமான நிறுவனத்தால் இயக்கப்பட்டது.

மேலும் அது வெனிசுலாவுடனான நாட்டின் எல்லைக்கு அருகிலுள்ள நோர்டே டி சாண்டாண்டர் மாகாணத்தில் உள்ள குகுடாவிலிருந்து ஒகானாவுக்குப் பறந்து கொண்டிருந்தபோது நேற்று முன்தினம் புதன்கிழமை விபத்துக்குள்ளாகியுள்ளது.

அதிகாரப்பூர்வ தகவலின்படி, அந்த விமானம் புதன்கிழமை காலை குகுடாவில் உள்ள கமிலோ டாசா சர்வதேச விமான நிலையத்திலிருந்து புறப்பட்டு, நண்பகலில் ஒகானாவில் தரையிறங்கத் திட்டமிடப்பட்டிருந்த சிறிது நேரத்திற்கு முன்பு விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டுடன் தொடர்பை இழந்தது.

உள்ளூர் அதிகாரிகள் பின்னர் விமானத்தின் சிதைந்த பாகங்களை பிளேயா டி பெலனில் உள்ள குராசிகாவின் தொலைதூர, மலைப்பாங்கான பகுதியில் கண்டுபிடித்தனர்.

விமானத்தில் பயணித்த 13 பயணிகள் மற்றும் இரண்டு பணியாளர்கள் உட்பட 15 பேரும் விபத்தில் இறந்ததை உறுதிப்படுத்தினர்.


விபத்து நடந்த பகுதி கரடுமுரடான நிலப்பரப்பு மற்றும் அடர்ந்த காடுகளுக்கு பெயர் பெற்றது.

இதனால் தேடுதல் மற்றும் மீட்பு நடவடிக்கைகள் சவாலானவை என்று அதி காரிகள் கூறியுள்ளனர்.

எவ்வாறெனினும், விமானப்படை மற்றும் சிவில் விமானப் புலனாய்வாளர்கள் உட்பட கொலம்பிய அதிகாரிகள், சம்பவ இடத்திற்கு குழுக்களை அனுப்பி விபத்துக்கான காரணம் குறித்து விசாரணையைத் தொடங்கியுள்ளனர்.

அனைத்துப் பயணிகளும் பணியாளர்களும் விபத்தில் உயிரிழந்ததாகவும், அதிகாரப்பூர்வ விசாரணை நடந்து வருவதாகவும் சிவில் விமானப் போக்குவரத்து நிறுவனம் உறுதிப்படுத்தியுள்ளது. (3)





## தென்கொ
## தொடர்ந்



(சியோல்)

தென் கொரியா
முன்னாள் ஜனா
யூன் சுக் யோல் சி
அடைக்கப்பட்டுள்ள
யில், அவரது மனை
கும் ஊழல் வழ
சிறை தண்டனை
கப்பட்டுள்ளது.

கிழக்கு ஆசிய ந
தென்கொரியாவின்
திபதியாக இருந்த யூ

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

## ...ல் திக் திக் நிமிடங்கள்!
### ... எச்சரிக்கை விடுத்த ட்ரம்ப்



**...ிங்டன்)..................**
**...ரான் அரசு அணுசக்தி ... புதிய ஒப்பந்தத்திற்கு உடன் ...கிக் கடுமையான இராணுவத் ... சந்திக்க நேரிடும் என்று ...க ஜனாதிபதி ட்ரம்ப் ...டல் விடுத்துள்ளார்.**


...த்து, ...கும் ...ான் ...தாக் ...தாக ...துள்

வெனிசுலாவில் இந்த மாத தொடக்கத்தில் அந்நாட்டு ஜனாதிபதி மதுரோவை கைதுசெய்ய அமெரிக்கா நடத்திய இராணுவ தாக்குதலில் ஈடுபட்டதைவிட பெரிய அளவிலான அமெரிக்க கடற்படை பிரிவான அர்மடா, தற்போது ஈரான் நோக்கி நகர்ந்து கொண்டிருப்பதாக ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

"ஆபிரகாம் லிங்கன்" என்ற பெயர் கொண்ட பிரம்மாண்ட விமானம் தாங்கிப் போர்க் கப்பல் தலைமையிலான இந்தக் கடற்படை, மிகுந்த வலிமையுடனும் வேகத்துடனும் ஈரானை நோக்கிச் சென்று கொண்டிருப்பதாக அவர் கூறியுள்ளார்.

மேலும், கடந்த மாதம் ஏற்கனவே ஈரான் மீது அமெரிக்கா நடத்திய "ஆபரேஷன் மிட் நைட் ஹேமர்" மூலம் ஏற்பட்ட அழிவையும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (3)

## ட்ரோன் உற்பத்தி ஆலை அமைக்க பங்களாதேஷ் – சீனா ஒப்பந்தம்



(டாக்கா)

சீனா மற்றும் பங்களாதேஷ் இடையே, பாதுகாப்பு உறவில் ஒரு முக்கிய அம்சமாக, ட்ரோன் எனப்படும் ஆளில்லா விமானங்கள் தயாரிப்பதற்கான ஆலையை அமைக்க ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளதாக பங்களாதேஷின் இடைக்கால அரசு தெரிவித்துள்ளது.

இந்த ஒப்பந்தத்தின்படி, சீன அரசுக்கு சொந்தமான பாதுகாப்பு நிறுவனங்கள், பங்களாதேஷ் இராணுவத்துடன் இணைந்து, அந்நாட்டிலேயே அதிநவீன ட்ரோன்களை தயாரிப்பதற்கான தொழில்நுட்பங்களை வழங்க உள்ளன.

இதன் வாயிலாக, பங்களாதேஷ் தன் இராணுவ தேவைகளுக்கு வெளிநாடுகளை சார்ந்திருப்பதைக் குறைத்து, சொந்தமாக ட்ரோன்களை தயாரிக்கும் திறனை பெறும்.

சமீபத்தில், பங்களாதேஷின் காக்ஸ் பஜார் பகுதியில் சீனாவின் உதவியுடன் பிரமாண்ட நீர்மூழ்கிக் கப்பல் தளம் ஒன்று கட்டி முடிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

அத்துடன் பங்களாதேஷின் மிகப்பெரிய ஆயுத விநியோகஸ்தராக சீனா இருந்து வருகிறமையும் குறிப்பிடத்தக்கது. (3)

## ...கொரிய முன்னாள் ஜனாதிபதியை ...ர்ந்து அவரது மனைவிக்கும் சிறை!



...ாரியாவின் ... ஜனாதிபதி ...ால் சிறையில் ...டுள்ள நிலை ... மனைவிக் ... வழக்கில் ...டனை விதிக் ...து.

...ஆசிய நாடான ...ாவின் ஜனா ...ந்த யூன் சுக்யோல் கடந்த ஆண்டு பதவியில் இருந்து நீக்கப்பட்டார்.

கடந்த 2024இல் சில மணி நேரம் இராணுவ ஆட்சியை அமுல்படுத்த முயன்றதாகக்கூறி, அவர் மீது தேச துரோக வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

மேலும், அதிகார துஷ்பிரயோகம் செய்த குற்றத்திற்காக ஐந்து ஆண்டுகள் தண்டனை விதிக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில், அவரது மனைவி கிம் கியோன் ஹீ மீது ஊழல் வழக்குத் தொடரப்பட்டது.

அரசியல் மற்றும் வணிகச் சலுகைகளை வழங்க பல மதத் தலைவர்கள், வணிக பிரமுகர்களிடமிருந்து இலஞ்சம் மற்றும் ஆடம்பரப் பரிசுகளை பெற்றதாக அவர் மீது குற்றம்சாட்டப்பட்டது.

இதற்காக விலை உயர்ந்த கைப்பைகள், வைர நெக்லஸ் உட்பட 51 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள பொருட்களை வாங்கியுள்ளமை தெரியவந்தது.

இதையடுத்து சியோல் நீதிமன்றம், அவருக்கு 20 மாதங்கள் சிறை தண்டனை விதித்து, நேற்று முன்தினம் தீர்ப்பு அளித்தது.

தென்கொரிய வரலாற்றில் முன்னாள் ஜனாதிபதி, அவரது மனைவி ஆகிய இருவரும் சிறை தண்டனை பெறுவது இதுவே முதல்முறையாகும். (3)



## உலக சந்தையில் முதன்முறையாக உச்சத்தை எட்டிய தங்க விலை



உலக வரலாற்றில் முதல்முறையாக ஒரு பவுண் தங்கத்தின் விலை 5 ஆயிரத்து அறுநூறு டொலர்களை எட்டியுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கடந்த 2025ஆம் ஆண்டில் மட்டும் தங்கத்தின் விலை 60 சதவீதத்திற்கும் மேலாக அதிகரித்திருந்த நிலையில், இந்த ஆண்டில் வரலாறு காணாத அளவுக்கு தங்கத்தின் விலை அதிகரித்துள்ளது.

கிரீன்லாந்து விவகாரத்தில் அமெரிக்காவிற்கும் நேட்டோ நாடுகளுக்கும் இடையே ஏற்பட்டுள்ள மோதல் மற்றும் சீனாவுடன் வர்த்தக ஒப்பந்தம் மேற்கொண்டால் கனடா மீது 100 சதவீத வரி விதிக்கப்படும் என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் விடுத்த எச்சரிக்கை உள்ளிட்ட காரணங்களினால் தங்கத்தின் விலை அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாய காப்புறுதி சபையினால் விவசாய காப்புறுதித்திட்டம் அறிமுகம்

(கொழும்பு)

2026ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் முதல் நடைமுறைக்கு வரும் வகையில், விவசாய, கால்நடை, காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் கீழ் உள்ள விவசாய காப்புறுதிச் சபையினால் விவசாயிகளுக்காக "காப்புறுதி மாதம்" பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

அதன்படி நெல், மக்காச்சோளம், உருளைக்கிழங்கு, பெரிய வெங்காயம், சோயா அவரை, மிளகாய் உள்ளிட்ட அனைத்துப் பயிர்களுக்கும் வறட்சி, வெள்ளம், காட்டு யானைகள், பூச்சித் தாக்கம், தீ விபத்துக்கள், நோய்கள் மற்றும் பீடைகளினால் ஏற்படும் அனைத்துச் சேதங்களுக்கும் காப்புறுதிப் பாதுகாப்பைப் பெற்றுக்கொள்ள முடியும்.

குறைந்த தவணைக் கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளும் இக் காப்புறுதித் திட்டங்களின் மூலம், இயற்கை அனர்த்தங்கள் உள்ளிட்ட பயிர்ச் சேதங்களுக்கு இழப்பீடு பெற்றுக் கொள்ள முடியும். கௌப்பி, பாசிப்பயறு, உளுந்து, குரக்கன், நிலக்கடலை, எள், கொள்ளு ஆகிய பயிர்களுக்கு ஏக்கருக்கு ரூபா 60 ஆயிரம் பெற்றுக்கொள்வதற்குச் செலுத்த வேண்டிய தவணைக் கட்டணம், காப்புறுதித் தொகையில் 7% ஆகும்.

இது தவிர, சர்க்கரைவள்ளி, மரவள்ளி, பால் கிழங்கு, பீட்ரூட், கோவா, கரட், லீக்ஸ், சிறிய வெங்காயம், கத்தரி, வெண்டை, அவரை, குடை மிளகாய், தக்காளி, பாகற்காய், பூசணி ஆகிய பயிர்களுக்கும் ஏக்கருக்கு காப்புறுதித் தொகையில் 7% செலுத்துவது போதுமானதாகும்.

இஞ்சி, மஞ்சள், கறுவா, மிளகு, அன்னாசி, பப்பாளி மற்றும் வாழை செய்கைகளுக்கும் மிகச் சலுகை அடிப்படையிலான தவணைக் கட்டணங்களின் கீழ் காப்புறுதிப் பாதுகாப்பைப் பெற்றுக்கொள்வதற்காகக் காப்புறுதித் திட்டங்களை விவசாயக் காப்புறுதிச் சபை அறிமுகப்படுத்தியுள்ளது.

இத்திட்டங்களில் பங்களிப்புச் செய்து பயிர்ச் சேத அபாயங்களைப் பாதுகாத்துக் கொள்ளுமாறு விவசாய காப்புறுதிச் சபை விவசாயிகளிடம் கேட்டுக்கொண்டுள்ளது.

இது தொடர்பான விபரங்களை விவசாயக் காப்புறுதிச் சபையின் தலைமை அலுவலகம் மற்றும் நாடு முழுவதும் அமைந்துள்ள மாவட்ட அலுவலகங்களிலும் பெற்றுக்கொள்ளலாம். (க-8)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1979- இந்து
நட்சத்திரம்: பரணி
உயரம்: 5'9"
தகைமை/தொழில்-Dental, Doctor
எதிர்பார்ப்பு: விவாகரத்தானவர்
தொ.இ: B/15902

பிறப்பு:1988- இந்து
நட்சத்திரம்:மிருகசீரிடம்
1இல்செவ்
தகைமை/தொழில்-Shop
எதிர்பார்ப்பு: தகுதியான பெண் விவாகரத்தானவர்
தொ.இ: B/15934

பிறப்பு:1995-இந்து
நட்சத்திரம்- மிருகசீரிடம்
கி-பா-7 1/4
உயரம்:5'6"
தகைமை/தொழில்-Customer Care
எதிர்பார்ப்பு: தகுதியான பெண், சைவபோசனம்
தொ.இ: B/15059

பிறப்பு: 1982- இந்து
நட்சத்திரம்:சதயம்
கி-பா-18
உயரம்:5'8"
தகைமை/தொழில் - A/L, PHI
எதிர்பார்ப்பு: தகுதியான பெண் விவாகரத்தானவர்
தொ.இ: B/15055

பிறப்பு: 1992 - இந்து
நட்சத்திரம்:பூசம்
உயரம்:5'6"
தகைமை/தொழில்: A/L, Ambulance Driver (Gov)
எதிர்பார்ப்பு: சைவபோசனம்
தொ.இ: B/16261

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு-1987-இந்து
நட்சத்திரம்-திருவாதிரை
கி.பா -43 3/4
உயரம்-5'6"
தகைமை/தொழில்: BE, Engineer (Newzealand)
எதிர்பார்ப்பு: விவாகரத்தானவர்
தொ.இ: G/14826

பிறப்பு-1983-இந்து
நட்சத்திரம்: அவிட்டம்
கி-பா-32
உயரம்: 5'9"
தகைமை/தொழில்: BSc, Engineer (கனடா)
எதிர்பார்ப்பு: விவாகரத்தானவர்
தொ.இ: G/14944

பிறப்பு-1991-இந்து
நட்சத்திரம்-உத்தரம்
12இல்செவ்
கி.பா -19 1/2
உயரம்-5'5"
தகைமை/தொழில்: Bio Engineer (Norway)
எதிர்பார்ப்பு: விவாகரத்தானவர்
தொ.இ: G/14954

பிறப்பு-1993-இந்து
நட்சத்திரம்:திருவாதிரை
12இல்செவ்
உயரம்: 5'1"
தகைமை/தொழில்: BFA, Manager (லண்டன்)
எதிர்பார்ப்பு: விவாகரத்தானவர்
தொ.இ: G/14975

பிறப்பு-1987-இந்து
நட்சத்திரம்:அச்சுவினி
8இல்சூரிசெவ்
கி-பா-71
உயரம்: 5'
தகைமை/தொழில்: BA, Accountant
எதிர்பார்ப்பு: விவாகரத்தானவர்
தொ.இ: G/14985

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# இன்று ஒரு தகவல் 532

தென்கச்சி கோ.சுவாமிநாதன்



## நான் எங்கே?

ஒரு தேசத்திலே ஒரு ராஜா! அந்த மன்னன் பெயர் மாலிண்ட். அந்த தேசத்திலே ஒரு பெரிய துறவியும் இருந்தார். அந்தத் துறவி பெயர் நாகசேன். அந்தத் துறவி நம் அரண்மனைக்கு வந்து ஆசீர்வாதம் செய்தால் நல்லா இருக்குமே என்று நினைத்தான் அந்த மன்னன். உடனே தூதுவனை அனுப்பி அவரை அழைத்துக் கொண்டு வரச் சொன்னான். அவரை அழைத்துக்கொண்டு வருவதற்கு! ஒரு தேரையும் அனுப்பினான். அவன் போனான். துறவியைப் பார்த்தான்.

"நாகசேன் துறவியாரே! எங்களுடைய மன்னர் உங்களை பார்க்க விரும்புகிறார். நான் உங்களை அழைத்துக்கொண்டுப் போகத்தான் வந்திருக்கிறேன்!" என்றான். அதற்கு அந்தத் துறவி,

"நீ விரும்பினால் நான் வருகிறேன். ஆனால் தயவு செய்து என்னை மன்னித்துக்கொள்ளுங்கள். இங்கே "நாகசேன்" என்று ஒருவரும் இல்லை. அது வெறும் பெயர்தான். அது ஒரு தற்காலிகமான முத்திரைதான் வேறொன்றுமில்லை!" என்றார். என்ன இது வித்தியாசமான ஆளாக இருக்கிறாரே என்று நினைத்தான் கூப்பிட வந்தவன். அதன்பின் ராஜா அனுப்பிய தேரிலே ஏறி அரண்மனைக்கு வந்து சேர்ந்தார் துறவி. அரண்மனை வாசலிலே நின்றுக்கொண்டிருந்த மன்னன் ஓடிவந்து "நாகசேன் துறவி அவர்களே! நான் உங்களை வரவேற்கிறேன்!" என்றான்.

இதைக் கேட்டதும் அந்தத் துறவி சிரிக்க ஆரம்பித்துவிட்டார்.

"நாகசேனுக்கு நீங்கள் கொடுக்கின்ற மரியாதையை ஏற்கிறேன். ஆனால் நாகசேன் என்கிற பெயருடைய யாரும் இங்கே இல்லை என்பதை ஞாபகத்திலே வைத்துக் கொள்ளுங்கள்!" என்றார். மன்னனுக்கு ஒன்றும் புரியவில்லை. "துறவியாரே நீங்கள் புதிர் போட்டுப் பேசுகிறீர்கள் என்று நினைக்கிறேன்.

நீங்களா இல்லை என்றால் என்னுடைய அழைப்பை இப்போது ஏற்றுக்கொண்டிருக்கிறது யார்?. இந்த வரவேற்புக்கும் பதில் சொல்லிக் கொண்டிருக்கிறது யார்?" என்று கேட்டான். உடனே அந்தத் துறவி பின்னால் திரும்பிப் பார்த்தார். அவர் ஏறி வந்த தேர் நின்றுக் கொண்டிருந்தது. "இதுதானே நான் ஏறிவந்த தேர்?" என்றார். "ஆமாம்!" அதிலே பூட்டியிருக்கின்ற குதிரைகளை அவிழ்த்து விடுங்கள் என்றார். அவிழ்த்து விட்டார்கள். துறவி அந்தக் குதிரைகளைக் காட்டி "இதுதான் நான் ஏறி வந்த தேரா?" என்றார். "இல்லை. இது குதிரை இது எப்படி தேர் ஆகமுடியும்!" என்றார்கள்.

"சரி... குதிரையை அப்பாலே ஓட்டிக்கொண்டுப் போங்கள். அது பூட்டியிருந்த நுகத்தடியை எடுங்கள்!" என்றார். எடுத்தார்கள்! "இந்த நுகத்தடிதான் தேரா?" என்றார். "இல்லை!" என்றார்கள்.

பின்பு அந்த சக்கரத்தை கழட்டச் சொன்னார். இப்படி ஒவ்வொரு பகுதியாகப் பிரித்து எடுக்கச் சொல்லி அதுதான் தேரா என்று கேட்டுக்கொண்டே வந்தார். இது இல்லை, இது இல்லை என்று சொல்லிக்கொண்டே வந்தார்கள்.

கடைசியிலே ஒவ்வொன்றாக எல்லாவற்றையும் பிரித்து எடுத்ததற்கு பிறகு அங்கே ஒன்றுமே இல்லை! இப்போது அந்தத் துறவி கேட்டார்.

"எங்கே இப்போது உங்களுடைய தேர் போனது. அதிலேயிருந்து எடுத்த ஒவ்வொரு பகுதியும் இது தேர் இல்லை. இது தேர் இல்லை என்று சொல்லி விட்டீர்கள். அப்படி என்றால் தேர் எங்கே? அது எங்கே இருக்கு?" என்று கேட்டார். மன்னன் விழிக்க ஆரம்பித்தான். இப்போது அந்தத் துறவி சொன்னார். "தேர் என்று தனியாக ஒன்றும் கிடையாது. அதுமாதிரி, நான் என்று தனியாக நமக்குள்ளே ஒன்றும் கிடையாது! நம் உறுப்புகள் ஒவ்வொன்றையும் தனித்தனியாக அகற்றிப் பாருங்கள். கடைசியிலே ஒன்றும் இருக்காது.

அன்பு என்பது இந்த ஒன்றுமில்லாத தன்மையிலேதான் பிறக்கிறது. இந்த ஒன்றுமில்லாத தன்மைதான் கடவுள்!"

இது ஒரு பெரியவர் கொடுக்கின்ற விளக்கம் (ஓஷோ).


நம் ஆட்கள் இந்தத் தத்துவத்தை தவறாக உபயோகப்படுத்த முயற்சி செய்வது உண்டு. ஒரு ஆள் கடன் வாங்கிவிட்டான். கடன் கொடுத்தவன் இவனைத் தேடி அலைந்து கண்டுபிடித்தான். நடுத்தெருவிலே ஒருநாள் "கப்" என்று கெட்டியாகக் கையைப் பிடித்துக் கொண்டான். வாங்கிய கடனுக்கு வழி சொல்லிவிட்டுப் போனான். இவன் பார்த்தான்.

"இதோ பாரப்பா உண்மையிலேயே "நான்" என்று ஒன்றும் கிடையாது. அது ஒன்றுமில்லாத ஒரு தன்மை! அதனாலே "நான்" உன்னிடம் கடன் வாங்கினேன் என்று சொல்வது பொய்!" என்றான். அவன் பார்த்தான். "நீ சொல்வது உண்மைதான். என்னிடம் கடன் வாங்கியது நீ இல்லை. உன்னுடைய இந்தக் கைதான் கடன் வாங்கியது. அதனாலேதான் இந்த கையை மட்டும் "கப்" என்று பிடித்திருக்கிறேன்.

உன்னை ஒன்றும் செய்யமாட்டேன். நீ பயப்படாதே. இந்தக் கையை மட்டும்தான் தனியாக எடுத்து எங்கள் வீட்டுக்கு அழைத்துக் கொண்டுப் போகப் போகிறேன்!" என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





தென்மராட்சி சிவபூமி பாடசாலை திறப்பு விழா நேற்று முன்தினம் புதன்கிழமை "தங்க வாசம்" வேலாயுதம் வீதி, சாவகச்சேரியில் சிவபூமி அறக்கட்டளை தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் கலந்து சிறப்பித்தார்.

# நிபா வைரஸ் குறித்து அச்சம் கொள்ள தேவையில்லை

## சுகாதார பிரதி அமைச்சர்

**(கொழும்பு) ......................**
**இந்தியாவில் பரவிவரும் நிபா வைரஸ் குறித்து இலங்கை மக்கள் தேவையற்ற அச்சம் கொள்ளத் தேவையில்லை என சுகாதார பிரதி அமைச்சர் மருத்துவர் ஹன்சக விஜேமுனி தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், நிபா வைரஸ் குறித்து இலங்கையின் சுகாதாரத் துறையினர் தீவிர அவதானம் செலுத்தி வருகின்றனர். இருப்பினும், இதுவரை இலங்கையில் எவரும் பாதிக்கப்படவில்லை.

நிபா வைரஸ் தொற்று சந்தேகம் இருப்பின், அவர்களைப் பரிசோதிப்பதற்கான வசதிகள் மற்றும் பரிசோதனை உபகரணங்கள் இலங்கையிடம் போதிய அளவில் கையிருப்பில் உள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இது வௌவால்கள் மற்றும் பன்றிகள் போன்ற விலங்குகளிடமிருந்து பரவக்கூடிய வைரஸ் ஆகும். மனிதர்களுக்கிடையே பரவும் வாய்ப்பு மிகக் குறைவு என்பதால், இது ஒரு பெருந்தொற்றாக மாறுவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

தாய்லாந்து, சிங்கப்பூர் போன்ற நாடுகள் விமான நிலைய சோதனைகளை ஆரம்பித்த போதிலும், இலங்கையில் தற்போது அதற்கு அவசியம் இல்லை.

நிபா வைரஸ் தாக்கிய ஒருவர் மிகக் கடுமையான நோய்ப் பாதிப்புக்கு உள்ளாவார்.

எனவே, அந்த நிலையில் ஒருவர் விமானம் ஏறி நாட்டுக்குள் வருவது சாத்தியமற்றது.

இதனால் தேவையற்ற முறையில் காலத்தையும் பணத்தையும் செலவழித்து சோதனைகளைச் செய்ய வேண்டிய அவசியமில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

நிபா வைரஸ் தொற்றினால் உயிரிழக்கும் விகிதம் 40 முதல் 75 வீதம் வரை காணப்படுவதால் ஆசிய பிராந்தியத்தில் பல நாடுகள் இது குறித்து அதிக கவனம் செலுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (8)

# ஒழுக்கம் பேணல்




முனைவர்
ச.மனோன்மணி

ஒழுக்கம் என்பது ஓர் உயர்ந்த பண்புநலனாகும். மனித வாழ்க்கைக்கு ஒழுக்கம் மிகவும் இன்றியமையாதது. சிறப்பான வாழ்க்கைக்கு ஒழுக்கம் உறுதுணையாக இருப்பதால் அது உயிரைக் காட்டிலும் உயர்ந்ததாக எண்ணப்படுகிறது. நாம் உயிர்வாழ்வதற்காக உடலைப் பேணுகிறோம். அது போல நாம் சிறந்த மனிதராக வாழ்வதற்கு ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். "ஒழுக்கம்" என்ற சொல் ஒழுங்கு எனப் பொருள் தருவது. எந்தச் செயற்பாட்டையும் ஓர் ஒழுங்கிலே செய்தால் அது நேர்த்தியாக இருக்கும். தொடர்ந்து அந்த நேரத்தில் கடைப்பிடிக்கப்படும் போது அது உயர்ந்த மனித விழுமியமாக மதிக்கப்பட்டது.

சிறந்த ஒழுங்குமுறையிலே செயற்பாடுகளை நாம் தொடர்ந்து செய்வதற்கு ஒரு பயிற்சி தேவை. சிறுவயது முதல் இப்பயிற்சியை மேற்கொண்டால் வாழ்க்கையில் ஒழுங்கு தானாகவே வந்துவிடும். அதுவே ஒழுக்கம் என்னும் பண்பு நலனாக எம்மைத் தொடரும்.

ஒழுக்கம் நல்லொழுக்கம், தீய ஒழுக்கம் என இரண்டாக வகுக்கப்பட்டுள்ளது. வாழ்வியல் நடைமுறைகளை ஒழுங்காகக் கடைப்பிடிப்பது நல்லொழுக்கம் எனப்பட்டது. அவை செவ்வனே கடைப்பிடிக்கப்படாமல் பிறரைத் துன்புறுத்தும் செயற்பாடாக அமைந்தால் அது தீயொழுக்கம் எனப்பட்டது. நல்லொழுக்கம் நற்செய்கைக்கு வித்தாக அமையும். ஆனால் தீயொழுக்கமோ வாழ்க்கை முழுவதும் துன்பத்தையே தரும்.

மனதிலே நல்ல எண்ணங்களை நிலைநிறுத்த நல்லொழுக்கமே துணை செய்யும். உடல் உறுப்புகள் யாவும் ஓரொழுங்கு



## வெள்ளி நற்சிந்தனை 24

நிலையிலேயே அமைந்துள்ளன. அவற்றின் செயற்பாடும் ஒழுங்காக அமைந்தால் உடல் நலமாக இயங்கும். இது இயற்கையின் ஒரு கொடையாகும். ஆனால் அந்த ஒழுங்கு நிலையைச் செயற்கையாக நாம் குழப்பும் போது பல சிக்கல்கள் ஏற்படுகின்றன. உடல் நோய் வாய்ப்பட நேரிடுகிறது. ஆனால் இதனை ஒழுக்கம் என எவரும் ஏற்பதில்லை. எனினும் எமது முன்னோர் வாழ்வியல் நடை முறைகளை ஓர் ஒழுங்கிலே வகுத்துச் செயற்படுத்தினர். அவர்கள் உடலுறுப்புகளின் செயற்பாட்டை மிக ஒழுங்காகப் பேணி வந்தனர். அதனால் அவர்களுடைய எண்ணங்களும் தெளிவாக இருந்தன. அவர்கள் உள்ளமும் ஒழுக்கம் பேணியது. ஒழுக்கம் பேணப்பட்டதால் தீய செயற்பாடுகள் தவிர்க்கப்பட்டன. ஒழுக்கம் என்ற சொல்லுக்கு எதிராக வள்ளுவர் இழுக்கம் என்ற சொல்லை அறிமுகம் செய்துள்ளார். ஒழுக்கமாக வாழ்பவர் என்றும் மேன்மை எய்துவர். "இழுக்கம்" என்னும் எதிர்மாறான செயற்பாட்டைச் செய்பவர்கள் பழிக்கு ஆளாகுவர். ஒழுக்கமுடையவர் ஒருபோதும் தீயசொற்கள் பயன்படுத்த மாட்டார்கள்.

அவர்களால் பிறகுக்கு எவ்வித தீங்கும் நேராது. எனவே ஒழுக்கத்தை எல்லோரும் கடைப்பிடிக்க வேண்டும். அது அவர்களுடைய [illegible] என்றும் உற்ற துணையாக நிற்கும்.

வள்ளுவர் "கூடாவொழுக்கம்" எனப் பிறிதொரு நிலையையும் சுட்டி உள்ளார். இது சிறப்பாக இல்லற வாழ்வை விடுத்துத் துறவறம் பூண்டவருக்காகவே எடுத்துரைக்கப்பட்டுள்ளது. உலக வாழ்க்கையை விடுத்துத் துறவு பூண்டவர்கள் மனத்தால் தூய்மையின் ஒழுக்கக்கேடான செயற்பாடுகளைச் செய்வதுண்டு. அப்போது அவர்களைப் பார்த்து ஐம்பூதங்களும் தம்முள்ளே நகைக்கும் என வள்ளுவர் கூறுகிறார். இயற்கை அவர்களுடைய செயலைக் கண்காணிக்கும் என்ற நம்பிக்கை இங்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அவர்களுடைய உயர்ந்த தோற்றப்பாட்டை யாருமே மதிக்கமாட்டார்கள்.


தவம் செய்வதாகக் கூறிக்கொண்டு அதற்கு மாறான செயல்களைச் செய்பவர்களை வள்ளுவர் புலித்தோல் போர்த்திய பசுக்கள் எனக் குறிப்பிட்டுள்ளார். அவர்களுடைய வஞ்சக வாழ்க்கையை யாரும் போற்ற மாட்டார்கள். உள்ளத்திலே அழுக்குடன் நாளும் நீராடி மறைந்து வாழும் மனிதரை நாம் விலக்கவேண்டும். இத்தகையவர்களுடைய அறவாழ்வை எவருமே பின்பற்ற முடியாது. அதனால் வள்ளுவர் அவர்களுடைய தவறான ஒழுக்கத்தைக் "கூடாவொழுக்கம்" எனத் தனியாக ஓர் அதிகாரத்தில் விளக்கியுள்ளார்.

மனித விழுமியங்களுள் மிகச் சிறப்பாகப் போற்றப்பட்ட ஒழுக்கம் இன்று பெரிதாகச் செயற்பாட்டில் பேணப்படுவதில்லை. தமிழருடைய பண்பாட்டில் ஏற்பட்ட பிற பண்பாட்டுக் கலப்பும் தமிழர் புலப்பெயர்வும் இதற்குப் பெரிதும் துணை செய்கின்றன. உடல், உள்ளம் என்ற இரண்டினதும் ஒழுங்கான செயற்பாடு விஞ்ஞானத்தின் வளர்ச்சியாலும் பொறிமுறைகளின் கையாட்சியாலும் தடம் புரண்டுள்ளது. அது தீமையானது என்பதை நன்கு உணர்ந்தாலும் அதிலிருந்து மீளமுடியாமல் ஒழுக்கத்தைக் கைவிடும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனைக் கண்டு இயற்கையும் நகைப்பதை எவரும் இன்னமும் கருத்தில் கொள்ளவில்லை. அதனால் ஒழுக்கம் என்ற மனித விழுமியம் மறக்கப்பட்டுவருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "எனது வாழ்க்கையே எனது செய்தி"

## அகிம்சையின் தந்தை மகாத்மா காந்தியின் 78 ஆவது சிரார்த்த தினம் இன்று



உலகம் போற்றும் வரலாற்று நாயகர் ஒருவர் மறைந்து 78 ஆண்டுகள் கடந்துவிட்டன. ஆம் காந்தியின் மறைவு இந்தப் பூவுலகுக்கு பேரிடியாக அமைந்தது. அகிம்சையை ஆயுதமாகக் கொண்ட அண்ணல் துப்பாக்கிக் குண்டுக்கு இலக்கானார்.

நாம் காந்தியைப் போற்றுவதோடும் பாராட்டுவதோடும் நின்றுவிடாமல் அவரது போதனையின் உயிரான உணர்வை சத்தான சாரத்தை துல்லியமாக உள்வாங்கி சமகாலச் சிக்கல்களைத் தீர்க்க அவ்வுட்பொருளை சமகால சூழலுக்குப் பொருத்திப் பார்த்து உரிய தீர்வுகளைத் துணிந்து காண வேண்டும்.

இந்தியாவுக்கு சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுத்த காந்தி, பெற்ற சுதந்திரத்தைப் பேணிப் பாதுகாக்க எத்தகைய பண்புத் தரத்தை மக்கள் பெற்றிருக்க வேண்டும் என்பதையும் தம் வாழ்நாள் முழுவதும் பேசியும் எழுதியும் வந்தார். தான் பின்பற்றிய கொள்கை களைத் தம் தொண்டர்களையும் மக்க ளையும் பின்பற்றச் செய்ய எப்போதும் முயன்றார். இந்திய வரலாற்றோடு மட்டு மல்ல உலக வரலாற்றோடு இரண்டறக் கலந்து விட்ட காந்தியடிகளின் வாழ்வு சிந்தனை ஆகியவற்றின் முக்கியத்து வத்தைப் புரிந்து கொள்வது இன்றைய தலைமுறைக்கு அவசியமான ஒன்றாகும்.

அகிம்சை என்பது சாகப் பயந்தவர்களின் ஆயுதம் அல்ல. அது சாகத் துணிந்தவர்களின் வாழ்க்கை முறையாகும். அகிம்சையை கொள்கையாகக் கொண்ட காந்தியடிகள் ஆன்மிக அடிப்படையில் சுதந்திரப் போராட்டத்தையும் சமூக விடுதலையையும் முன்னெடுக்க வழிகாட்டினார். ஆன் மிகம் எதிலே நுழைந்தாலும் அது புனிதமாகும். ஆன்மிகத்தில் மெய்யைத் தவிர எது நுழைந்தாலும் அது களங்கத்தையே உருவாக்கும். இந்த உண்மையை நன்கு தெரிந்து தெளிந்து இந்திய நாட்டை வழிநடத்திய தலைவரே மகாத்மா காந்தி.

அவர் சுதந்திரத்தை வாங்கித் தரும் பயணத்தின் போது அந்த சுதந்திரத்தை ஆளவும் அனுபவிக்கவும் தேவையான பல்வேறு பக்குவங்களையும் மக்களுக்குச் சொல்லித் தந்துள்ளார். மத நல்லிணக்கம் விரும்பிய காந்தி ஈஸ்வரன், அல்லா, ராம் என பல நாமங் களில் பல கடவுளரை வணங்கினாலும் கடவுள் என்பது உள்ளக் கருத்தில் "மெய்" என்ற ஒரே பொருளையே சுட்டுகிறது எனத் தெளிவாக உணர்ந்தவராக இருந் தார். மெய்ப்பொருள் பற்றிய ஆய்வில் ஈடுபட்ட காந்தி தன்னுடைய அனுபவங் களை "சத்திய சோதனை" என்ற பெயரில் சுயசரிதையாக எழுதினார்.

இந்தியாவின் முதலாவது பிரதமரான நேரு அவர்கள் காந்தி பற்றி ஓரிடத்தில் குறிப்பிடும் போது "காந்தி முதன்மையான கொள்கைப் பண்புகளில் விட்டுக் கொடுக்காதவராகவும் காலத்துக்கேற்ற துணைநிலை நடவடிக்கைகளில் விட்டுக்கொடுப்பவர் ஆகவும் இருந்ததோடு எந்த நிலையிலும் "தீயது" என்று கருதுவனவற்றோடு சமரசம் செய்யாமல் இருந்தார்" என்கிறார்.

காந்தியைப் பொறுத்தவரை அகிம்சை அவருடைய வாழ்க்கை முறையாக இருந்தது. அதனால் தான் "எனது வாழ்க்கையே எனது செய்தி" என அவரால் கூற முடிந்தது. அடிகளாரின் மறைவு தினமாகிய ஜனவரி 30 ஆம் திகதியை உலகம் முழுவதும் சர்வோதய தினமாகக் கொண்டாடுகிறது. அனைத்து மக்களின் நலனுக்காகவும் பாடுபட்ட காந்தியை நாமும் துதிப்போமாக.

**எம். ஷாந்தன் சத்தியகீர்த்தி**
**நிர்வாக சபை உறுப்பினர் ,**
**அகில இலங்கை காந்தி சேவா சங்கம்.**
**ஆசிரியர் "காந்தீயம்"**

## அகில இலங்கை கம்பன் கழகம் நடத்தும் 2026ஆம் ஆண்டு கம்பன் விழாவுக்கான இலக்கியப் போட்டிகள்

- அமரர் துரை விஸ்வநாதன் ஞாபகார்த்த பேச்சுப் போட்டி.
- அமரர் பொன் பாலசுந்தரம் ஞாபகார்த்த கவிதைப் போட்டி.
- அமரர் என். கருணையானந்தன் ஞாபகார்த்த திருக்குறள் மனனப் போட்டி.
- இஸ்லாமிய இலக்கியப் பேச்சுப் போட்டி (அனுசரணை இலக்கியப் புரவலர் ஹாஷிம்உமர் அவர்கள்)

அகில இலங்கைக் கம்பன்கழகம் ஆண்டுதோறும் கொழும்பில் நடத்தி வரும் கம்பன் விழாவிற்கான மேற்படி போட்டிகள் விரைவில் நடைபெறவுள்ளன.

சென்ற ஆண்டுக்கான கம்பன் விழாவினை, நடத்த முடியாமற் போனதால், சென்ற ஆண்டு போட்டிகளுக்கென விண்ணப்பித்த விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்களும் இவ் ஆண்டுப் போட்டியில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளன.

புதிதாக இவ்வாண்டுப் போட்டிகளுக்கென விண்ணப்பிப்போர் தமது விண்ணப்பங்களை கீழ்க்கண்டவகையில் தயாரித்து தரப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

### போட்டிக்கு விண்ணப்பிக்கும் விபரங்கள்

போட்டியாளர்கள் சுயமாகத் தயாரிக்கப் பெற்ற விண்ணப்பப் படிவத்தில் தமது முழுப்பெயர், வயது, பிறந்த திகதி, முகவரி, தொலைபேசி இலக்கம், மாணவராயின் பாடசாலையின் பெயர் ஆகியவற்றைக் குறிப்பதோடு தாம் கலந்து கொள்ளவுள்ள போட்டி விபரங்களையும் குறிப்பிட்டு, செயலாளர், கொழும்புக் கம்பன் கழகம், இல. 12, இராமகிருஷ்ண தோட்டம், கொழும்பு - 6 (Secretary,Colombo Kamban Kazhakam, 12, Ramakrishna Garden,Colombo - 06.) எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவேண்டும்.

ஒருவர் ஒன்றிற்கு மேற்பட்ட போட்டிகளிலும் கலந்துகொள்ளலாம். அங்ஙனம் கலந்து கொள்வதாயின் ஒவ்வொரு போட்டிக்கும் தனித்தனி விண்ணப்பங்கள் அனுப்பி வைத்தல் வேண்டும்.

கடித உறையின் மேற்பக்க இடது புறத்தில், போட்டியாளர் விண்ணப்பிக்கும் போட்டி விபரத்தை எழுதி, படிவங்களை 2026 மார்ச் மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னதாக அனுப்பி வைக்க வேண்டும். போட்டி நடைபெறும் திகதி போட்டியாளர்களுக்குத் தனித்தனியாகவும் ஊடகங்கள் மூலமும் அறிவிக்கப்படும்.

பாடசாலை மாணவர்களது விண்ணப்பங்களை தனித்தோ, தமிழ் மன்றங்களின் ஊடாகத் தொகுத்தோ அதிபரின் உறுதிப்படுத்தலுடன் அனுப்பி வைக்கலாம். ஏற்கனவே இப்போட்டிகளில் கலந்து தங்கப்பதக்கப் பரிசில்களைப் பெற்றோர் தவிர்ந்த, மற்றையோர் மேற்படி போட்டிகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

### போட்டிகளின் விபரங்கள்

**• அமரர் துரை விஸ்வநாதன் ஞாபகார்த்த பேச்சுப் போட்டி**

மேற்படி பேச்சுப்போட்டி, 02 பிரிவுகளாக நடைபெறவுள்ளது. மத்திய பிரிவுப் போட்டிகளில் 15 - 17 வயதுக்குட்பட்ட போட்டியாளர்களும், மேற்பிரிவு போட்டிகளில் 18 - 30 வயதிற்குட்பட்ட போட்டியாளர்களும் கலந்து கொள்ளலாம். போட்டிகளில் கலந்து கொள்வோர் உடன் தரப்படும் தலைப்புகளில் தம் பேச்சாற்றலை வெளிப்படுத்தவேண்டும்.

தலைப்புக்கள் இலக்கியம், கலை, வாழ்வியல் தொடர்பில் அமைந்திருக்கும்.

**• அமரர் பொன் பாலசுந்தரம் ஞாபகார்த்த கவிதைப் போட்டி**

மேற்படி கவிதைப்போட்டியில் 14 - 35 வயதிற்குட்பட்ட போட்டியாளர்கள் கலந்து கொள்ளலாம். இப்போட்டியில் பங்குபற்ற விரும்புவோர், "வித்தகக் கம்பனின் சொற்திறம்", "யாரே முடியக் கண்டார்?", "மீண்டும் தொடங்கும் மிடுக்கு" எனும் தலைப்புக்கள் ஒன்றில் புத்தாக்கக் கவிதை ஒன்றை ஆக்கி, மேலே தரப்பட்டுள்ள கழகத்தின் முகவரிக்கு 10.03. 2026இற்கு முன்பாக அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

எழுதப்படும் கவிதை எவ்வடிவத்திலும் அமையலாம். தரமானதாகத் தேர்ந்தெடுக்கப்படும் முதல் பத்துக் கவிதைகளை எழுதியவர்கள், இறுதிச் சுற்றுப்போட்டிக்காக நேரே அழைக்கப் படுவார்கள்.

**• அமரர் என். கருணையானந்தன் ஞாபகார்த்த திருக்குறள் மனனப் போட்டி**

மேற்படி போட்டி, ஒரே பிரிவாக மட்டும் நடைபெறும். இப்போட்டியில் தரம் 6 முதல் 9 வரையான வகுப்பு மாணவர்கள் கலந்து கொள்ளலாம். கலந்து கொள்வோர் திருக்குறள் பொருட்பாலின் "அரசியலில்" உள்ள "இறைமாட்சி" முதல் "வலியறிதல்" வரையிலான பத்து அதிகாரங்களை (100 குறள்கள்) மனனம் செய்வதோடு அக்குறள்களுக்கான பொருளறிவையும் பெற்றிருத்தல் வேண்டும்.

**• இஸ்லாமிய இலக்கியப் போட்டி (அனுசரணை இலக்கியப் புரவலர் ஹாஷிம்உமர் அவர்கள்)**

"இஸ்லாமிய தமிழிலக்கியப் பேச்சுப் போட்டியில்" பாடசாலை மாணவர்கள் மட்டும் கலந்து கொள்ளலாம். இப்போட்டி ஒரே பிரிவாக மட்டுமே இடம் பெறும். இப்போட்டியில் கலந்து கொள்வோர், கீழே வழங்கப்பட்டுள்ள தலைப்புக்கள் ஏதேனும் ஒன்றில் தம் பேச்சாற்றலை வெளிப்படுத்த வேண்டும்.

1. உமறுப்புலவரின் கவித்துவம்.
2. ம. மு. உவைசின் தமிழ்ப்பணி.
3. "கவிக்கோ" அப்துல் ரகுமானின் சிந்தனைகள்.
4. இஸ்லாமியம் காட்டும் வாழ்க்கை நெறி.

### போட்டி முடிவுகள் பற்றிய விபரங்கள்

போட்டிகளில் நடுவர் குழுவினரின் தீர்ப்பே இறுதியானதாகும். நடுவர் குழுவினால் தெரிவு செய்யப்படும் முதல் மூன்று போட்டியாளர்களுக்கும் நடைபெறவுள்ள கம்பன் விழாவில் தங்கம், வெள்ளி, வெண்கலப் பதக்கங்களும், சான்றிதழ்களும், பரிசில்களும் வழங்கப்படும்.

போட்டிகளில் அதிகூடிய இயல்பாளுமையை வெளிப்படுத்தும் போட்டியாளர்கள் கம்பன் விழா நிகழ்ச்சிகளில் இணைத்துக் கொள்ளப்படுவர்.

**அமைப்பாளர்,**
**அகில இலங்கை கம்பன் கழகம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்குள் இருக்கும் பண்புகள் தான் வெளியுலகில் எனக்குக் கிடைக்கும் மரியாதைக்கு ஆர்வம்.

– அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## அரச பதவி கிடைத்ததும் கர்வம் தலைக்கேறிவிடுகிறது

அரச நியமனம் – அரச பதவி என்பன மக்களுக்குச் சேவை செய்வதற்கானது. மக்களின் வரிப்பணத்திலேயே அரச பணியாளர்களுக்கான சம்பளம் வழங்கப்படுகிறது.

இருந்தும் அரச நியமனம் – அரச பதவி கிடைத்துவிட்டால், கணிசமானவர்கள் கர்வம் கொள்கின்றனர். எல்லாம் தங்களுடைய கட்டுப்பாட்டில் இருப்பதுபோல கற்பனை செய்கின்றனர்.

மக்களுக்குச் சேவையாற்றுவதற்காகவே தங்களுக்கு அரச நியமனம் வழங்கப்பட்டுள்ளதென்பதை அவர்கள் மறந்து போகின்றனர்.

உண்மையில் அரச நியமனம் ஒருவருக்குக் கிடைத்தது என்றால், அவர் முதலில் இறைவனுக்கு நன்றியுடையவராக இருக்க வேண்டும்.

இங்கு இறைவனுக்கு நன்றியுடையவராக இருத்தல் என்பது; **மக்கள் தொண்டே மகேசன் தொண்டு** என்ற உண்மைக்குக் கட்டுப்படுவதாகும்.

எனவே ஒவ்வொரு அரச உத்தியோகத்தர்களும் தங்களின் கடமையை நேர்மையாகவும் விசுவாசமாகவும் ஆற்றுவது கட்டாயமானது.

அதே சமயம் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் கடமை எதுவோ அதனை செம்மையாகச் செய்ய வேண்டும்.

உதாரணத்துக்கு ஒரு மருத்துவர் நோயாளர்களை அன்புடன் அனுசரித்து அவர்களுக்கு உரிய சிகிச்சையை அளிப்பது அவரின் கடமையாகிறது.

சிலவேளையில் குறித்த நோயாளியுடன் அன்பாகக் கதைத்து அவரின் பிரச்சினைகளைக் கேட்பது கூட அவருக்கான மிகச் சிறந்த சிகிச்சையாக இருக்கும்.

அதேபோன்று கால்நடை மருத்துவர்கள் காலம் உணர்ந்து தங்களின் சேவையை வழங்க வேண்டும்.

ஆம், வாய் பேசாத ஜீவராசிகளின் உயிரைக் காப்பாற்றுவதென்பது கோடி புண்ணியம். அதிலும் கால்நடைகளின் உயிர்களைக் காப்பாற்றுவது, சம்பந்தப்பட்ட குடும்பங்களின் பொருளாதாரத்தையும் காப்பாற்றுவதாக அமையும்.

இவ்வாறே ஆசிரியர்கள் தங்களை நம்பி வருகின்ற மாணவர்களை ஆளாக்கி விடுகின்ற பணியை தெய்வப் பணியாகச் செய்ய வேண்டும். இவை ஒரு சில உதாரணங்கள் மட்டுமே.

மாறாக, அனைத்து அரச உத்தியோக்த்தர்களும் சினம் கொள்ளாது – பொருத்தமற்ற வார்த்தைப் பிரயோகங்களை ஒருபுறம் ஒதுக்கி வைத்துவிட்டு, நாங்கள் அரச உத்தியோகத்தர்கள். எங்கள் பணி மக்களுக்கானது என்ற உன்னதமான சிந்தனையோடு செயலாற்ற வேண்டும்.

இவ்வாறு பணியாற்றுகின்ற உன்னதமான அரச உத்தியோகத்தர்கள் நம் மத்தியில் பலர் உள்ளனர். அத்தகையவர்களை மக்கள் மதிக்கின்றனர். மனத்தால் வாழ்த்துகின்றனர்.

ஆனால் இங்கு ஒட்டுமொத்த அரச உத்தியோகத்தர்களும் அவ்வாறு இருக்க வேண்டும் என்பதே பொதுமக்களினதும் அரசாங்கத்தினதும் எதிர்பார்ப்பாக உள்ளது.

எனவே அரச பதவி கண்டு கர்வம் கொள்ளாது, அன்பு – சேவை – நீதி – நேர்மை – இன்சொல் என்பனவே எங்களை வாழ வைக்கும் என்ற உண்மையை உணர்ந்து, எம் சந்ததிக்கும் புண்ணியம் தேடுவோமாக.

# திட்டமிட்ட இன அழிப்பிற்கு எதிராக தமிழ் மக்கள் தொடர்ச்சியாகப் போராடுவர்

## தமிழர் மரபுரிமை பேரவை தெரிவிப்பு

திட்டமிட்ட இன அழிப்பிற்கு எதிராக தமிழ் மக்கள் தொடர்ச்சியாகப் போராடுவார்கள் என தமிழர் மரபுரிமை பேரவை தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக தமிழர் மரபுரிமைப் பேரவையின் இணைத்தலைவர் வண லியோ ஆம்ஸ்ரோங் அடிகளார் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மாகாவலி அதிகார சபையினால் வெளியிடப்பட்டிருக்கின்ற திட்ட அறிக்கையின் படி கிவுல் ஓயா நீர்த்தேக்கமானது வவுனியா வடக்குப் பிரதேச செயலாளர் பிரவில் உள்ள தமிழர்களின் பூர்வீக கிராமமான வெடிவைத்த கல்லு கிராமத்திற்கு அண்மையாக வட கிழக்கு திசையாக மகாவலி அதிகார சபையினால் அமைக்கப்படவுள்ள மிகப்பாரிய நீர்த்தேக்கமாகும்.

மகாவலி அதிகார சபை தனது திட்ட அறிக்கையில் வெளிப்படையாகவே இந்நீர்த்தேக்கத்தின் பயனாளிகள் 3203 சிங்கள குடும்பங்கள் என தெரிவித்துள்ளது. 37 மீற்றர்கள் (121.37 அடிகள்) உயரமான அணையின் மூலம் உருவாக்கப்படவுள்ள இந் நீர்த்தேக்கத்தின் எல்லைகள் தற்பொழுது மகாவலி அதிகார சபையினால் வவுனியா வடக்குப் பிரதேச செயலாளர் பிரிவில் எல்லைக்கல்லிடப்பட்டு காட்டப்பட்டுள்ளன.

இதன்படி பாரம்பரிய தமிழ் கிராமங்களான வெடிவைத்த கல்லு, ஈச்சங்குளம், கூழாங்குளம், காட்டுப்பூவரசங்குளம், காஞ்சூரமோட்டை போன்ற கிராமங்களின் 400 ஏக்கருக்கு மேற்பட்ட விவசாய மற்றும் குடியிருப்பு நிலங்கள் நீரினுள் மூழ்கும் நிலை காணப்படுகின்றது.

மேலும் 1921 இல் வர்த்தமானி அறிவித்தல் மூலம் ஒதுக்குக் காடாக அறிவிக்கப்பட்ட பெரிய கட்டிக்குளம் ஒதுக்குக் காட்டில் 4000 ஏக்கரும் இந் நீர்த்தேக்கத்தில் அமிழ்ந்து போவதுடன் வவுனியா வடக்குப் பிரதேச செயலாளர் பிரிவின் அடையாளப்படுத்தப்பட்ட 47 தொல்லியல் பிரதேசங்களும் கிவுல் ஓயாவினுள் மூழ்கிப் போகவுள்ளது என்பதனை மகாவலி அதிகார சபையின் திட்ட அறிக்கையின் மூலம் அறிந்து கொள்ள முடிகின்றது.

இந் நீர்த்தேக்கத்திற்கு மிக அண்மையாக உள்ள சைவ வழிபாட்டு இடமான வெடுக்குநாறி மலைப் பிரதேசத்தினை தொல்லியல் இடமெனக் கூறி தமிழ் மக்களின் வழிபாட்டினைத் தடை செய்யும் தொல்லியல் திணைக்களம்.

இந்த 47 தொல்லியல் பிரதேசங்களினையும் கிவுல் ஓயாவினுள் நீரினுள் மூழ்கிப்போவதற்கு தனது இசைவினை தெரிவித்துள்ளமை தமிழர் பூர்வீக நிலங்களில் அமைந்துள்ள இத்தொல்லியல் சின்னங்கள் தமிழர் மரபுரிமை சார்ந்தவையாக அமைந்திருப்பதனாலேயே என சந்தேகிக்க ஏதுவாகின்றது.

இத் திட்டத்தின் மூலம் பயன்பெறவுள்ள 3203 சிங்களக் குடும்பங்களும் ஏற்கெனவே திட்டமிடப்பட்டு தமிழர் பூர்வீக பகுதிகளில் இராணுவ நடவடிக்கை மூலம் துரத்தியடித்து அவர்கள் பாரம்பரியமாக வாழ்ந்த பிரதேசங்களினை வெலிஓயா பிரதேச செயலாளர் பிரிவாக அறிவித்து அங்கு குடியேற்றப்பட்ட சிங்கள மக்களேயாவர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவின் கொக்குத்தொடுவாய் மத்தி, கொக்குத்தொடுவாய் வடக்கு, கொக்குத்தொடுவாய் தெற்கு, கருநாட்டுக்கேணி ஆகிய கிராம அலுவலர் பிரிவுக்குரிய ஆமையன் குளம், உந்தராயன் குளம், அடையகர்த்தான், படுகாட்டுக்குளம், சாம்பான்குளம் போன்ற 2000 ஏக்கர் வளமான விவசாய நிலங்கள் தமிழ் மக்களிடமிருந்து அபகரிக்கப்பட்டு சிங்கள மக்களிற்கு வழங்கப்பட்டுள்ளது.

தற்போது கிவுல் ஓயா திட்டத்தின் கீழ் இது மேலும் விஸ்தரிக்கப்பட்டு கொக்குத்தொடுவாய் சூரியநாற்றுப்பகுதியில் தமிழ் மக்களுக்கு மத்தியவகுப்புத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட 1990 ஏக்கர் காணிகள் கிவுல் ஓயாத் திட்டத்தில் உள்வாங்கப்பட்டு திட்ட வரைபடம் தயாரிக்கப்பட்டுள்ளது. திட்டமிடப்பட்ட நில அபகரிப்பையும் வடபகுதியின் இனப்பரம்பல் கோலத்தினை மாற்றுவதனை இலக்காகக் கொண்டு காலத்திற்கு காலம் ஆட்சிபீடமேறும் அரசுகள் காய் நகர்த்தி வருவது வெளிப்படையாகவே அவதானிக்கப்படுகிறது.

இன்றுவரை மகாவலி அதிகார சபையினால் எந்தவொரு வட மாகாண தமிழ்ப் பொது மகனும் பயனடையாத வகையில் இனவாத இயந்திரமாக்கப்பட்டுள்ள மகாவலி அபிவிருத்தி அதிகார சபை தமிழ் மக்களின் தொடர்ச்சியான எதிர்ப்பினையும் மீறி தமது திட்டமிட்ட குடியேற்றத்தினை செய்வதற்காக முனைப்புக் காட்டி வருவதனை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இலங்கைத் தீவில் நிலையான அபிவிருத்தி சமாதானம், சமத்துவம், நல்லிணக்கம் ஏற்பட வேண்டுமாயின் இவ்வாறான திட்டமிட்ட இன அழிப்பினூடாக அதனை ஒருபோதும் அடைய முடியாது என்பதனை அரசிற்கு சுட்டிக்காட்டுகின்றோம். அதற்கு எதிராக தமிழ் மக்கள் தொடர்ச்சியாகப் போராடுவார்கள் என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(ம-7)

### மனோன்மணி அம்பாளுக்கு

# தைப்பூச நன்நாளில் மகா கும்பாபிஷேகம்

(பருத்தித்துறை)

யாழ்ப்பாணம் புலோலி கிழக்கு சாந்தாதோட்டம் திருவருள்மிகு ஸ்ரீ முதலி (மனோன்மணி) அம்பாள் தேவஸ்தான மகா கும்பாபிஷேகப் பெருவிழா எதிர்வரும் 01.02.2026 ஞாயிற்றுக்கிழமை தைப்பூச நன்நாளில் இடம்பெறவுள்ளது.

அதனை முன்னிட்டு நாளை சனிக்கிழமை (31) காலை 7 மணி முதல் மாலை 4 மணி வரை எண்ணைக்காப்பு சாற்றும் நிகழ்வு இடம்பெறும்.

கும்பாபிஷேக நன்னாளில் மகா பூர்ணாகுதி சமர்ப்பணம், பிரதான கும்பங்கள் மூலாயம் எழுந்தருளல் என்பன முறையே இடம்பெற்று காலை 7.45 மணி முதல் 8.57 மணி வரையிலான சுபவேளையில் அம்பிகைக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் மகா கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது.

தொடர்ந்து 14 நாட்கள் மண்டாலாபிஷேகம் நடைபெற்று 15 ஆம் நாள் 1008 சங்காபிஷேகமும் இடம்பெறவுள்ளதாக ஆலய பரிபாலன சபையின் செயலாளர் இ.கிருபாகரசூரியன் தெரிவித்துள்ளார்.

(ம-7)

# B⁻ குருதி தேவை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டப் பொது வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வரும் ஒருவருக்கு அவசரமாக B Negative (B-) குருதி தேவைப்படுகின்றது.

இந்தக் குருதி வகையையுடைய குருதிக் கொடையாளர்கள், மாஞ்சோலை இரத்த வங்கிக்கு நேரில் சென்று குருதிக்கொடை வழங்கி, மனித உயிரைக் காக்கும் இம்முக்கிய பணியில் ஒத்துழைக்குமாறு பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

(ம-7)

# இ.போ.ச - தனியார் பேருந்து வவுனியாவில் விபத்து

வவுனியா - நெளுக்குளம்பகுதியில் இ.போ.ச பேருந்து மற்றும் தனியார் பேருந்து மோதி விபத்துக்குள்ளாகியதாக நெளுக்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா- மன்னார் வீதியில் நெளுக்குளம் பகுதியில் நேற்றுப் பிற்பகல் (29) குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

வவுனியா நோக்கி வந்த இ.போ.ச பேருந்தும் அதே திசையில் பின்னால் வந்த தனியார் பேருந்தும் மோதியதில் குறித்த விபத்து ஏற்பட்டுள்ளது.

எனினும் எவருக்கும் எவ்வித காயங்களும்,ஏற்படவில்லை என்பதுடன் இரு பேருந்துகளும் சேதமடைந்துள்ளன.

சம்பவம் தொடர்பில் நெளுக்குளம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

(ம-7,250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடாவடிக் கோட்டை

## அமெரிக்க உளவுத்துறை சிஐஏ வரலாறு 10

என்.சொக்கன்

நடந்ததை வெளியே சொல்லவும் முடியாமல், மறைக்கவும் முடியாமல் தவித்தார்கள். அமெரிக்காவுடன் ஒப்பிடுகையில், க்யூபா ஒரு பொடி தேசம். அவர்களிடம் இப்படி உதை வாங்கியது சிஐஏவுக்கு மிகப் பெரிய அவமானமாகிவிட்டது.

ஆனால், அவர்களால் செய்யக் கூடியது எதுவும் இல்லை. எங்கேயும் யாரையும் எப்படியும் கவிழ்த்து விடலாம் என்கிற அவர்களுடைய எண்ணத்தில் முதல் அடி விழுந்தது க்யூபாவில்தான்.

அதன்பிறகுதான், சிஐஏ நிதானமாக உட்கார்ந்து யோசிக்க ஆரம்பித்தது. யார் இந்த ஃபிடல் காஸ்ட்ரோ? நேற்று முன்தினம் மாலை இராணுவப் புரட்சி நடத்தி ஆட்சியைப் பிடித்தவர் தானே? அவர் மீது மக்களுக்கு ஏன் அப்படி ஓர் ஈர்ப்பு?

இந்தக் கோணத்தில் உளவு பார்க்கத் தொடங்கியபோதுதான், காஸ்ட்ரோ என்கிற ஆளுமையின் முழுப் பரிமாணமும் அமெரிக்காவுக்குப் புரியத் தொடங்கியது. க்யூப மக்களிடையே காஸ்ட்ரோவுக்கு இருக்கிற ஆதரவு, வலுக்கட்டாயமாக மிரட்டி வரவழைத்தது அல்ல. "இருப்பதில் இந்த ஆள் பெட்டர்" என்று சலிப்பின் காரணமாக அவர்கள் காஸ்ட்ரோவைத் தங்கள் தலைவராக ஏற்றுக்கொள்ளவில்லை.


பாடிஸ்டா (Fulgencio Batista) என்பவரின் கொடுங்கோல் அரசாங்கத்தை விரட்டியடித்து விட்டுதான், க்யூபாவின் ஆட்சிப் பொறுப்பைக் கைப்பற்றியிருந்தார் ஃபிடல் காஸ்ட்ரோ. ஆகவே, நாட்டுக்குச் சுதந்திரம் வாங்கிக் கொடுத்தவர், நம்முடைய வாழ்க்கையில் விளக்கேற்றப்போகிறவர், க்யூபாவை முன்னேற்றப்போகிறவர் என்கிற முழு நம்பிக்கையுடன், அந்நாட்டு மக்கள் காஸ்ட்ரோவை மனமார ஏற்றுக் கொண்டிருந்தார்கள்.

சுருக்கமாகச் சொன்னால், காஸ்ட்ரோவின் பிரபலத்துக்குக் காரணம், வெறும் தனிநபர் வழிபாடு இல்லை. கொள்கையளவில் மக்கள் அவருடன் ஒன்றியிருந்தார்கள். இதுதான் சிஐஏவுக்குப் புரியவில்லை. வீழ்த்த முடியாத தலைவர் என்று ஒருவர் உண்டா? என்று வீம்புடன் மீண்டும் காஸ்ட்ரோவுக்கு எதிராகக் கிளம்பினார்கள்.

இந்தமுறை, அவர்கள் கலகக்காரர்களைத் தேடவில்லை. சிஐஏ உளவாளிகளை க்யூபா முழுவதும் ஊடுருவச் செய்தார்கள். இவர்கள் எல்லோருக்கும், எப்படியாவது காஸ்ட்ரோவைக் கொன்றுவிடவேண்டும் என்பதுதான் ஒரே நோக்கம்.

இதற்காக அவர்கள் தீட்டிய அதிபுத்திசாலித்தனமான திட்டங்களை முன்பே பார்த்தோம். கடைசி வரை, அவர்களால் காஸ்ட்ரோவின் நிழலைக்கூடத் தொடமுடியவில்லை.

அதன்பிறகும், அவர்களுக்கு முழுசாக ஞானம் வரவில்லை. காஸ்ட்ரோவைக் கொல்லதான் முடியவில்லை. க்யூப மக்களிடையே அவருக்கு இருக்கிற கவர்ச்சியைக் குறைக்கவாவது செய்யலாம் என்று மேலும் சில அசட்டுத்தனங்களில் இறங்கினார்கள்.



காஸ்ட்ரோவின் கம்பீரமான அந்த தாடியைப் பார்த்துதான் க்யூப மக்கள் இப்படி மயங்கிக் கிடக்கிறார்கள் என்று சிஐஏவுக்கு எந்தப் புண்ணியவான்களோ துப்புக் கொடுத்துவிட்டார்கள். உடனே அவர்கள் எப்படியாவது அந்த தாடியைப் பிடுங்கி எறிந்துவிடவேண்டும் என்பதற்கான திட்டங்களைத் தயார் செய்தார்கள்.

இதற்காக, காஸ்ட்ரோவின் காலணிகளில் தாலியம் கலந்த உப்பைத் தூவ முயன்றது சிஐஏ. இந்த இரசாயனம் உடம்பில் கலந்தால் தலைமுடி, தாடி, மீசை, புருவம் என்று சகலமும் உதிர்ந்துபோய் விடும். அதன்பிறகு, க்யூப மக்கள் காஸ்ட்ரோவைப் புறக்கணித்து விடுவார்கள்.

மகாபுத்திசாலித்தனமான இந்தத் திட்டமும், படுதோல்வி அடைந்தது. அப்போதும் சளைக்காமல், காஸ்ட்ரோவின் இமேஜைக் குலைப்பதற்கான தனது முயற்சிகளைத் தொடர்ந்தது சிஐஏ.

அடுத்த திட்டம், காஸ்ட்ரோ ஏதேனும் ஒரு முக்கியமான பொது நிகழ்ச்சியில் கலந்துகொள்கிறபோது, அவருடைய சுருட்டில், எப்படியாவது போதை மருந்துகளைக் கலந்து கொடுத்துவிடவேண்டியது. அவர் அதைப் புகைத்துவிட்டு, "தண்ணித் தொட்டி தேடி வந்த கன்னுக்குட்டி நான்" என்று டப்பாங்குத்து டான்ஸ் ஆடுவார். அதைப் பார்த்து முகம் சுளிக்கும் க்யூபப் பொதுஜனம், காஸ்ட்ரோவை வெறுத்து ஒதுக்கிவிடும்.

சிரிக்காதீர்கள். அடுத்ததாக, இந்த அச்சுபிச்சுத் திட்டங்களையெல்லாம் தூக்கிச் சாப்பிடும்படியான ஒரு மெகா காமெடியையும் சிஐஏ முயன்று பார்த்தது.

இந்தமுறை, அவர்கள் க்யூபர்களின் கடவுள் நம்பிக்கையைக் கையில் எடுத்துக்கொண்டார்கள். பரம நாத்திகரான காஸ்ட்ரோவின் ஆட்சி ஒழிந்தால்தான், கடவுள் உங்களை ஆசீர்வதிப்பார் என்று பிரசாரம் செய்யத் தொடங்கினார்கள்.

மற்ற நாட்டு மக்களைப்போல, க்யூபர்கள் இதுமாதிரியான எதிர்ப் பிரசாரங்களை அத்தனை சுலபத்தில் நம்புகிறவர்கள் இல்லை. இதைப் புரிந்துகொண்டிருந்த சிஐஏ, அவர்களை நம்பச் செய்வதற்காக ஒரு பிரம்மாண்டமான "அவதாரக்" காட்சிக்கு ஏற்பாடு செய்திருந்தது.

அதுவும் சாதாரண அவதாரம் இல்லை, ஜீசஸ் அவதாரம். அவர் பூமிக்கு வரத் தயாராகிவிட்டார். ஆனால், நாத்திகர்களால் ஆட்சி செய்யப்படுகிற க்யூபாவில் அவர் கால் பதிக்கத் தயங்குகிறார். இதுதான் கதை, வசனம். இதை அடிப்படையாக வைத்துக்கொண்டு, ஷங்கர் பட ரேஞ்சுக்கு கிராஃபிக்ஸ் காட்சிகளைத் தயார் செய்தார்கள்.

அமெரிக்கக் கப்பல் ஒன்றிலிருந்து, க்யூபாவின் கடற்கரைப் பகுதியில் பிரம்மாண்டமான பிம்பம் ஒன்றை உருவாக்கினார்கள். அதுதான் யேசு கிறிஸ்துவாம். அவரை மீண்டும் பூமிக்கு வரவிடாமல் தடுக்கும் அயோக்கியர்தான் ஃபிடல் காஸ்ட்ரோவாம்.

இந்தக் கதையை க்யூபர்கள் நம்பிவிடுவார்கள். "ஓ ஜீஸஸ்" என்று பதறிப்போய், உடனடியாக காஸ்ட்ரோவின் தாடியைப் பிடித்து இழுத்துக் கொண்டு வந்து கடலுக்குள் தள்ளிவிடுவார்கள் என்று நினைத்திருக்கிறது சிஐஏ.

அமெரிக்காவின் இந்தக் கடவுள் அவதாரக் கதையை க்யூபர்கள் நம்பவும் இல்லை. காஸ்ட்ரோமீது அவர்கள் வைத்திருந்த நம்பிக்கை குறையவும் இல்லை. பழையபடி சிஐஏ மூக்கு உடைந்து திரும்பியது தான் மிச்சம்.

எனினும், அதன்பிறகு பல வருடங்களுக்கு, அவர்கள் காஸ்ட்ரோவின் ஆட்சியை வீழ்த்துவதற்கான முயற்சிகளை மட்டும் கைவிடவில்லை. இன்றுவரை, அமெரிக்காவின் காலைச் சுரண்டிக் கடுப்பேற்றுகிற ஒரே அவஸ்தை க்யூபாதான், காஸ்ட்ரோதான்.

உலகத்தில் ஏகப்பட்ட கம்யூனிஸ்ட் ஆட்சியாளர்கள், ஆதரவாளர்கள் இருக்கையில், ஃபிடல் காஸ்ட்ரோ மீது மட்டும் அமெரிக்காவுக்கு அப்படி என்ன விரோதம்?

இதற்கு இரண்டு காரணங்கள். முதலாவது, அமெரிக்காவிற்கும் க்யூபாவுக்கும் கூப்பிடு தூரம்தான். இத்தனை பக்கத்தில் ஒரு கம்யூனிஸ்ட் ஆதரவு ஆட்சியை வைத்துக் கொண்டிருப்பது அவர்களுக்குப் பொறுக்கவில்லை. "இத்தனூண்டு மூக்குப் பொடி டப்பா சைஸ் தேசம், இதை அழிக்க முடியவில்லை" என்று பொறுமித் தீர்க்கிறார்கள்.

அடுத்தபடியாக, காஸ்ட்ரோ வெறுமனே கம்யூனிச ஆதரவாளராக இருந்துவிட்டால் கூடப் பரவாயில்லை. அவர் சோவியத் யூனியனுடன் கூட்டுச் சேர்ந்துகொண்டு அமெரிக்காவை ஆழம் பார்க்கத் தொடங்கினார். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சர்வதேச...

இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ள நீடிக்கப்பட்ட நிதி வசதி திட்டத்தின் வெற்றியை ஆராய்வதற்கும் இலங்கைக்கு சர்வதேச நாணய நிதியத்தின் தொடர்ச்சியான ஆதரவை உறுதிப்படுத்துவதற்கும் அவர் இந்த விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார். (ம-7)

## குப்பைக்கு...

என்பவரே உயிரிழந்தவராவார்.

மேற்படி வயோதிப மாது நடக்க முடியாத நிலையில் வீட்டில் உள்ள அறை ஒன்றில் படுக்கையாக இருந்துள்ளார்.

வீட்டிலிருந்த மகள் கடந்த 17 ஆம் திகதி பிற்பகல் அறைக்கு அருகாமையில் குப்பைக்கு தீயை வைத்துவிட்டு வயோதிப மாது இருந்த அறையை பூட்டிவிட்டு கடைக்கு சென்றுள்ளார்.

அச்சமயம் மூட்டிய தீ அருகில் இருந்த விறகில் பற்றி அறையின் ஜன்னல் வழியாக அங்கிருந்த ஆடைகளில் பற்றி பழைமையான வீட்டின் தீராந்தியில் பற்றியுள்ளது.

இதனால் அங்கு படுக்கையில் இருந்த வயோதிப மாது கூக்குரலிடவே அருகில் இருந்த மற்றைய மகள் கதவை இடித்து திறந்து தீக்காயத்துக்குள்ளான வயோதிப மாதுவை யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதித்தார்.

இந்நிலையில் அவர் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் புதன்கிழமை (28) பிற்பகல் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,60)

## டிப்பர் மோதி...

செயலகத்துக்கு முன்பாக இவ் விபத்து இடம்பெற்றுள்ளது.

இதில் பளை மாசார் சோரன்பற்று பகுதியைச் சேர்ந்த குமாரசாமி செல்வவாணி (வயது-63) என்பவரே உயிரிழந்தவராவார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து பளை நோக்கிச் சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிளை பளையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த டிப்பர் வாகனம் மோதியே இவ் விபத்து இடம்பெற்றுள்ளது.

டிப்பர் சாரதியை பளைப் பொலிஸார் கைது செய்துள்ளதுடன் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ம-7,60,316)

## கிவுல் ஓயா...

ஓயா நீர்த்தேக்கத் திட்டமானது நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. குறிப்பாக வவுனியா மற்றும் முல்லைத்தீவில் வாழ்கின்ற மக்களின் இனப்பரம்பலை மாற்றுகின்ற செயற்பாட்டினை முன்னெடுக்கும் நோக்குடனும் எங்களுடைய மக்களின் பொருளாதாரத்தை அழிக்கின்ற செயற்பாடாக இத்திட்டம் அமையவுள்ளது.

அத்தோடு வனவளத்திணைக்களமே குறித்த பிரதேசத்தினுடைய பாரியளவான காட்டினை அழிப்பதற்கு உறுதுணையாக இருப்பதற்கும் நாம் எதிர்ப்புத் தெரிவிப்பதோடு, பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்றினையும் முன்னெடுக்கவுள்ளோம்.

அதன் அடிப்படையில், குறித்த ஆர்ப்பாட்டமானது எதிர்வரும் 02ம் திகதி திங்கட்கிழமை நெடுங்கேணி பேருந்து நிலையத்திற்கு முன்பாக முன்னெடுக்கப்படவுள்ளது.

எனவே எமது எதிர்காலத்தினை சிந்தித்து அனைத்து அரசியல் கட்சிகள், பொது அமைப்புகள், பொதுமக்கள் அனைவரும் குறித்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் பங்குகொள்வதற்கு அழைப்பு விடுப்பதாக அவர் தெரிவித்தார். (ம-7,250)

## யுத்தத்தால்...

தாயகம் திரும்பும்போது எவ்வித இடையூறுகளுமின்றி நாட்டுக்குள் அனுமதிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

ஊடகமொன்றுக்கு நேற்றுக் கருத்து வெளியிடும்போதே அவர் இந்த விடயங்களைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

சட்டத்தில் உள்ள நிபந்தனைகளில் திருத்தம் மேற்கொள்வது தொடர்பில் சட்டமா அதிபரின் பரிந்துரைகள் கோரப்பட்டுள்ளன.

சட்டமா அதிபரின் பரிந்துரைகளுக்கு அமைய உரிய சட்ட நடவடிக்கைகளைப் பின்பற்றி, அவற்றை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்த விடயம் தொடர்பில் ஏற்கெனவே அமைச்சரவைக்கு தெளிவுபடுத்தியுள்ள நிலையில் சட்டத்தில் உள்ள நிபந்தனைகளில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டதன் பின்னர், தாயகம் திரும்பும் இலங்கையர்களை எவ்வித இடையூறுகளுமின்றி நாட்டுக்குள் அனுமதிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

எனினும் நாடு திரும்புவோர் போர்க்காலச் சூழலில் நாட்டிலிருந்து சென்று தாம் ஐக்கிய நாடுகள் சபையின் கண்காணிப்பின் கீழ் வசித்தமைக்கான சான்றுப்பத்திரங்களைச்சமர்ப்பிப்பது கட்டாயமானது என்றார். (ம-7)

## புதிய...

மற்றும் முறையாக வகுப்புகளை ஆரம்பிக்கும் தேசிய நிகழ்வு நேற்று நடைபெற்றது.

பிரதமர் ஹரிணி அமரசூரிய தலைமையில் கொழும்பு மாவட்டத்தின் அத்துருகிரிய குணசேகர வித்தியாலயத்தில் குறித்த தேசிய நிகழ்வு நடைபெற்றது.

புதிய கல்வி மறுசீரமைப்பிற்கு ஏற்ப தயாரிக்கப்பட்ட வகுப்பறைகளை பிரதமர் உள்ளிட்ட அதிகாரிகள் கண்காணித்தனர். (ம-7)

## அனை...

One Text Initiative அரசியலமைப்பு சீர்திருத்த உரையாடலுக்கான இயக்கத்தினால், ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில் இந்த கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மறுமலர்ச்சி யுகத்தை கட்டியெழுப்பு வதற்காக ஒரு புதிய நிறைவேற்றிக்கொள்ளல் அத்தியாவசியமான ஒரு முன்தேவை என்பதையும் தமது இயக்கம் உறுதியாக நம்புவதாகவும் ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும் ஒரு புதிய அரசியலமைப்பை நிறைவேற்றிக் கொள்ளல் இலங்கைக்கு ஒரு முக்கியமான சவால் எனவும் அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே இந்த முயற்சியில் அனைவரையும் உள்ளடக்கி அனைவரினதும் பங்கேற்பை உறுதிசெய்யும் சீர்திருத்தச் செயன்முறையை உறுதிசெய்வதும் அவசியம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

மஹஜன சம்பத
திகதி 2026.01.29
சீட்டிழுப்பு இலக்கம் 6089
J 7 9 0 9 5 9
அத சம்பத J 0 9 5 9
சீட்டிழுப்பு இலக்கம் 0664
National Lotteries Board

சுப தவசக்
திகதி 2026.01.29
சீட்டிழுப்பு இலக்கம் 205
மேடம் 20 47 63
3553

தன நிதானய
திகதி - 2026.01.29
சீட்டிழுப்பு இலக்கம் - 2119
P 51 61 64 74 P
Double Chance

மெகா பவர்
திகதி 29/01/2026
சீட்டிழுப்பு இலக்கம் 2437
S 19 06 57 63 68

ஜய ஜய JAYA
திகதி 2026.01.29
சீட்டிழுப்பு இலக்கம் 0357
H 3 9 2 1

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4331
சீட்டிழுப்பு திகதி 29.01.2026
M 23 24 35 65
M
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2026.01.29
சீட்டிழுப்பு இலக்கம் 1398
கும்பம் 08 11 49 62 கும்பம்

உத்தியோகபூர்வ முடிவுகள்
சுப்பர் பல சவிய
29.01.2026 வெற்றி வாரம் 0797
V 8 2 3 1 1 2
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.20,000,000.00
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 3063
சீட்டிழுப்பு திகதி 2026.01.29 தினம் வியாழக்கிழமை
09 15 19 65 B
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 93,863,410.40

சனிதா
29.01.2026 வெற்றி வாரம் 5224
09 34 37 64 X
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 55,028,558.00

சசிரி
வெற்றி வாரம் 893
சீட்டிழுப்பு திகதி 29.01.2026 வியாழக்கிழமை
01 13 18
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.3,401,560.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4775
சீட்டிழுப்பு திகதி 29.01.2026 தினம் வியாழக்கிழமை
08 09 28 30
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.5,654,624.80

லக்ன வாசனா
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
T 12 34 42 43 62
2239
29.01.2026 வியாழக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.624,538,028.60

ADA KOTIPATHI
வியாழக்கிழமை
வெற்றி வாரம்: 2889
சீட்டிழுப்பு திகதி: 2026.01.29
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.83,743,561.60
17 31 36 42 C

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பணிப்பெண் தேவை

மாதகலில் அமைந்துள்ள வீடு ஒன்றில் தங்கி நின்று வீட்டு வேலை மற்றும் குழந்தைகளைப் பராமரிப்பதற்கு பணிப்பெண் தேவை.

- தங்கி நின்று பணிபுரிதல் வேண்டும்.
- 45 வயதுக்கு மேற்பட்டவராக இருக்க வேண்டும்.

077 030 6881

(1998)


# கொக்கட்டிச்சோலை படுகொலையின் 39வது ஆண்டு நினைவேந்தல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு, கொக்கட்டிச்சோலை படுகொலையின் 39வது ஆண்டு நினைவேந்தல் புதன்கிழமை மகிழடித்தீவு சந்தியில் அமைந்துள்ள படுகொலை நினைவுத் தூபியில் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

1987ம் ஆண்டு ஜனவரி 27, 28ஆம் திகதிகளில் அந்தப் பகுதியில் சிறப்பு அதிரடிப்படையினரால் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கையின் போது இறால் பண்ணையொன்றில் பணியாற்றிய பணியாளர்கள், முனைக்காடு, முதலைக்குடா, மகிழடித்தீவு, பண்டாரியாவெளி, படையாண்டவெளி, கடுக்காமுனை, கொக்கட்டிச்சோலை அரசடித்தீவு, அம்பிளாந்துறை, கற்சேனை, பட்டிப்பளை, தாந்தாமலை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான மக்கள் சுட்டுக் கொல்லப்பட்டு எரிக்கப்பட்டிருந்தனர். (ம-7)




## 22 உடன் விற்பனைக்கு 22

01. யாழ். ஆஸ்பத்திரி வீதியில் லைடன் கம்பனிக்கு அண்மையில் காரைநகர் வீதியில் 40 பரப்பு காணியும்
02. யாழ். K.K.S வீதி தெல்லிப்பளை துர்க்கை அம்மன் கோவிலுக்கு அண்மையில் K.K.S வீதி முகப்புடன் 10 பரப்பு காணியும் 16 பரப்பு காணியும்
03. யாழ். வைத்தீஸ்வரா பாடசாலைக்கு அண்மையில் 4 பரப்பில் அமைந்த மாடி வீடும் காணியும்
04. யாழ். ஆனைக்கோட்டை வீதியில் உயரப்புலத்தில் 7 பரப்பில் அமைந்த காணியும் வீடும்
05. யாழ். நல்லூர் கோவிலுக்கு அண்மையில் 22 பரப்பு காணியும்
06. யாழ். ஸ்ரான்லி வீதியில் மக்கள் வங்கிக்கு அண்மையில் 4 கடைகளும்
07. யாழ். ஆரியகுளம் சந்தியில் 5 பரப்பு காணியும்
08. யாழ். வைமன் வீதியில் 5 பரப்பு காணியும் வீடும்
09. யாழ். கச்சேரிக்கு அண்மையில் 3 பரப்பு காணியும்
10. யாழ். மின்சார நிலைய வீதி (பழைய தபாற் கந்தோர் வீதியில் 6 பரப்பு காணியும்
11. யாழ். மின்சார நிலைய வீதியில் CTB தரிப்பிடத்திற்கு பின்பாக 2 கடைகளும் விற்பனைக்குண்டு.

(C-4908)

தொடர்பு : 0777 232 535



## தென்னிந்திய யாத்திரை

தமிழ்நாடு, ஆந்திரா, பாண்டிச்சேரியுடனான யாத்திரை

யாத்திரிகர் : 10 நாட்கள் : 12

Amount 250,000

**ஆரம்பத் திகதி : 01.03.2026**

தரிசிக்கும் இடங்கள் : உச்சிப்பிள்ளையார், மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர், திருப்பதி, ஸ்ரீரெங்கம், சமயபுரம், பிரம்மாகோயில், இராமேஸ்வரம், பழனி, திருத்தணி, திருப்பரம்குன்றம், திருச்செந்தூர், சிதம்பரம், ஏகாம்பரேஸ்வரர், காலகஸ்தி, திருவெண்ணாமலை, சுவாமிமலை, பழமுதிர்ச்சோலை, திருவெண்ணைக்காவல், மேல்மருவத்தூர், தஞ்சாவூர், நவபாஷாணம்,சூரியன், சந்திரன், சுக்கிரன், புதன், வியாழபகவான், செவ்வாய், ராகு, கேது, சனி பகலான், திருநள்ளாறு, நளன்குளத்தின் நீராடல், தோணியப்பர், மனக்குழ விநாயகர், திருக்கடையூர் பஞ்சவடி விநாயகர், வடபழனி முருகன் உட்பட 45 இற்கும் குறையாத ஆலயங்களைத் தரிசிப்பதுடன் மெரீனாபீச், பாண்டிச்சேரி பீச், MGR ஜெயலலிதா,அண்ணா சமாதிகளையும் அப்துல் கலாமின் மணிமண்டபமும், பார்க்கலாம்.

சென்னையில் ஒரு நாள் Shopping

தங்களிடம் பெற்றுக்கொள்ளும் ரூபாவுக்கு எமது சேவை இருவழி விமான ரிக்கட், மூன்று வேளை சுத்தமான சைவ உணவு, குடிநீர், 2 பேருக்கு கட்டில் மெத்தை, குளியலறை இணைந்த அறைகள், AC வாகன வசதி, கொழும்பில் இருந்து ஏயர்போட் போகவும் வரவும் வாகன வசதி இவை அனைத்தும் எமது சேவை.

- யாழ்ப்பாணம் – கொழும்பு
  கொழும்பு – யாழ்ப்பாணம் வாகன சேவை உண்டு
- இந்த யாத்திரை ஒவ்வொரு மாதமும் இடம்பெறும்.

(1997)

தொடர்புகளுக்கு: கலாநிதி T.ஸ்ரீரெங்கநாதன் மகன் : ராஜன்
59, 3/6, செட்டியார் தெரு, கொழும்பு -11.
srianganathan1944@gmail.com, sriranganathan2601@gmail.com
Tel : 077 736 2154



TEACHME SEARCH | COMPARE | FIND

Eduexpo JAFFNA - 2025

# இன்று வட மாகாணத்தின் மிகப்பெரிய கல்வி கண்காட்சி ஆரம்பம்

2026 ஜனவரி

30 31

9 AM – 5 PM

அனுமதி இலவசம்

Eduexpo JAFFNA - 2025

- கல்வி உதவித்தொகை திட்டங்கள்
- தொழில் துறை வழிக்காட்டல்
- முழு / பகுதி நேர வேலை வாய்ப்புகள்
- உணவுத்திருவிழா
- Mind Master (சதுரங்கப் போட்டி)
- Hack Fest (Hackathon)
- The Performance Hub
- Paper/ Master Classes
- Social Media பிரபலங்களின் சந்திப்பு

# திருவள்ளுவர் கலாச்சார மையம் யாழ்ப்பாணம்.

(6699)


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.01.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org